## அதிகாரம் 1

# சிருஷ்டிப்பு

ஆதியாகமம் ஓர் அழகும் மகிமையும் நிறைந்த சிருஷ்டிப்பான உலகதோற்றத்தை சித்தரித்து துவங்குகிறது. சர்வ வல்லமைபடைத்த சிருஷ்டி கர்த்தரின் வார்த்தையினால் ஒரு பிரகாசமுள்ள வெளிச்சம், அந்தகார இருளை ஊடுருவிச்சென்று வெளிச்சத்தை இருளினின்று பிரித்தது. ஆசிரியர், ஒரு ஓவியரைப்போல் இப்பிரபஞ்சத்தை பின்னணியாகக் கொண்டு, ஒரு பெரிய சித்திர பாடமாக வர்ணித்து காட்டியுள்ளார். ஜலத்தின் மத்தியில் ஒரு பிரிவு உண்டானது. அது ஜலத்தை வானத்திலும் மற்றும் பூமியின் மேலுள்ளதுமாக பிரித்தது. இதை தொடர்ந்து புல்லையும், விதையை பிறப்பிக்கும் பூண்டுகளை கொண்டிருக்கும் வெட்டாந்தரையும் உண்டானது. வானத்திலே, இரவிலிருந்து பகலைப் பிரிக்க பகலையும், நாட்களையும், சூரியன், சந்திரன், நட்சத்திர கூட்டங்களும், காலங்களையும் வருஷங்களையும் குறிக்க உண்டாக்கப்பட்டன.

இந்த மகா பெரிய மூலப்பிரமாண்டத்தின் முன்னிலையில், ஆசிரியரின் சிருஷ்டிப்பு பற்றியதான தரிசனம், சிறிய தகவல்களுடன் சுருக்கப் பட்டுள்ளது. கீழேயுள்ள தண்ணீரை நிரப்பும்படி, கடல் சார்ந்த ஒவ்வொரு உயிரினங்களையும் தேவன் வழங்கினார், அதே வேளையில், எண்ணற்ற பறவைகள் மேலே வானத்தில் பறந்தன. ஆசிரியரும்/கலைஞருமான அவர் வெட்டாந்தரையை பார்க்கும் போது, அந்த வெறுமையை எப்படி வெவ்வேறு ஜாதியான சகலகாட்டு மிருகங்களாலும், நாட்டு மிருக ஜீவன்களான மந்தைகளாலும், கால்நடைகளாலும், ஊரும் பிராணிகளாலும், பூமியின் மீதுள்ள ஜந்துக்களாலும் தேவன் நிரப்பினார் என்பதையும் சித்தரிக்கிறார். முடிவில், சிருஷ்டிப்பின் உச்சமைய மேடையில், தம்மைப் போன்று ஒரு ஜீவனை தேவன் உண்டாக்கினார்: அது சிருஷ்டிகருடன் தனிப்பட்ட விதமாக உறவாடும்படிக்கு, தம்முடைய ரூபத்தின்படி சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மனிதன் ஆவான். மற்ற எல்லா சிருஷ்டிப்புகளைவிட மனிதனை வித்தியாசமாக வைக்கும்படிக்கு, தமது ஆச்சரியமான சிருஷ்டிப்புகளின் மேல் ஆளுகை செய்து பராமரிக்கும்படியான மகா சிலாக்கியத்தையும் பொறுப்பையும் தேவன் மனிதனுக்குக் கொடுத்தார்.

ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்திலுள்ள இந்த சிருஷ்டிப்பின் காட்சி ஆச்சரியப்பட வைப்பதாயும், மனதைக் கவர்ந்து கொள்வதாயும் இருக்கின்றது. வாசிப்பவரை, சர்வ சுதந்திரரின் சிருஷ்டிப்பின்

விவேகத்திற்காகவும், ஞானத்திற்காகவும், வல்லமைக்காகவும் தேவனைத் தொழுக வைக்கிறது. உலகத்திற்கு உயிரோட்டம் கொடுக்க, தேவன் ஒருவர் பேச மாத்திரமே வேண்டியதாய் இருந்தது. பலவீனமும், பெலனற்றவனுமாகிய மனிதன் இந்த அழகான உலகத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும், மேலும், அவனுடைய பாவ சுபாவத்திலும், தேவனுக்கு விரோதமாய் இருந்த போதிலும், அவர் தொடர்ந்து மனிதனை ஆசீர்வதித்து, தேவைகளை வழங்குவதை ஒருவன் அறியும்போது, துதியையும், தாழ்மையையும் தூண்டுகிறது. இந்த ஆச்சரியமான காரியத்தையும் சங்கீதம் எட்டு பிரதிபலிக்கிறது.

> உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப் படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது (சங். 8:3-9).

சங்கீதக்காரன், இந்த சிருஷ்டிப்பு தெய்வீகமானதும், இவை யதார்த்தமானதாகவோ, ஒரு எதிர்பார்க்காத விபத்தாகவோ சிருஷ்டிக்கப் படவில்லை என்றும் மனிதகுலம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் எழுதியுள்ளார். ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிருஷ்டிப்பு முறையானதாயும், முழுமையானதாயும், சமான நிலையிலுள்ளதாயும் இருக்கின்றது. ஆசிரியர், இங்கே ஒரு பாடலை அல்ல, ஒரு எளிய எபிரெய இலக்கிய முறையைக் கொண்டு மறுபடியும் தொடர்ந்து வரும் ஆறு நாளில் படைக்கப்பட்ட சிருஷ்டிப்பாக விவரிக்கிறார்:

- ஒவ்வொரு நாளும் “தேவன் சொன்னார்” (1:3, 6, 9, 14, 20, 24: பார்க்க 1:11, 26, 29) என்ற ஒரு முன்னுரையோடு துவங்குகிறது.
- அடுத்து, “உண்டாகக்கடவது” ஒன்று “சேரக்கடவது,” “முளைப்பிக்கக்கடவது” (1:3, 6, 9, 11, 14, 20, 24, 26) என்ற தெய்வீக கட்டளைகள் கொடுக்கப்படுகிறது.
- ஒரு அறிக்கை: “அப்படியே ஆயிற்று” (1:7, 9, 11, 15, 24, 30) என்று கொடுக்கப்படுகிறது.

மதிப்பீடு ஒன்று “தேவன் அது நல்லது என்று கண்டார்” (1:4, 10, 12, 18, 21, 25, 31) என்று சிருஷ்டிக்கப்பட்டதை குறித்துகொடுக்கப்படுகிறது.

முடிவாக, காலத்தை தொடர்ச்சி அடங்கிய “சாயங்காலமும்,” “விடியற்காலமும்” (1:5, 8, 13, 19, 23, 31) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தேவன் தமது சிருஷ்டிப்பைப் பார்த்து “நல்லது” என்றும், “மிகவும் நல்லது” என்றும் கூறி முடித்த போதும், அவர் எபிரேய பதமான טוֹב (*tob*) என்பதை நீதி நெறியின் அடிப்படையில் “தீமையானது” என்பதற்கு எதிரிடையாக “நல்லது” என்ற அர்த்தத்தில் கூறவில்லை, மாற்றுக் கருத்தாக, இது ஒழுங்கும், எந்த ஒரு பழுதுமற்றதாயும், சீராக்குவதற்கு ஒன்றுமில்லாததாயும், அவை இருக்க வேண்டிய விதமாய் இருப்பதாலும், தேவன் படைத்ததை, அவர் முற்றிலுமாக ஏற்றுக்கொண்டார். ஓவியத் தலைவனான தேவன் தமது கைவேலையை, ஒரு விசை நின்று பார்த்து வியந்து பிரமித்து நின்றது போல் இருக்கிறது.

மற்றொரு சிருஷ்டிப்பை குறித்ததான கவிதை சார்ந்த பண்பானது என்னவெனில், சமநிலை அமைப்பு இதில் வானம், பூமி, எல்லாவித உயிருள்ள, உயிரில்லா படைப்புகள், ஆறு நாட்களில் சிருஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. முதல் நாளில், வெளிச்சத்திற்கும் இருளுக்கும் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. மற்றும் நான்காம் நாளில் மற்றும் நான்காம் நாளில் பகலையும், இரவையும் முறையாக பிரித்தறிய வானத்தில், சூரியன், சந்திரன், நட்சத்திர கூட்டங்கள் வைக்கப்பட்டன. இரண்டாவது நாள், தண்ணீரை வானத்தின் மேலும், பூமியின் கீழுமாக பிரித்தது. ஐந்தாவது நாள், மேலே வானத்தை பறவைகளாலும், கீழே தண்ணீரை ஜீவ ஜந்துக்களாலும் நிரப்பிற்று. மூன்றாவது நாள், தண்ணீரிலிருந்து (“சமுத்திரங்கள்”) வெட்டாந்தரை பிரிக்கப்பட்டது. இது விதைகளை பிறப்பிக்கும், பூண்டுகளையும், செடிகொடிகளையும் முளைப்பித்தது. ஆறாம் நாளில் வெட்டாந்தரையானது, சகலகாட்டு, நாட்டு மிருகங்களால் நிரப்பப்பட்டது. முடிவில், மனித இனமும் வைக்கப்பட்டது. இதனால், ஆதியிலிருந்த ஒழுங்கின்மையானது ஒழுங்கானதாயும், வடிவமில்லாதிருந்தது உருவம் பெற்றதுமாய் ஆனது. புத்தக ஆசிரியர், ஏழாவது நாளில், தேவன் ஓய்ந்திருந்தார் (2:2, 3) என்று சிருஷ்டிப்பின் விவரங்களை நிறைவு செய்கிறார்.

## சிருஷ்டிப்பின் சமநிலை அமைப்பு

வெறுமையும், "ஒழுங்கின்மையும்" (1:2) -
சீரற்றதும், அந்தகாரம் சூழ்ந்ததுமாயும்

| *கோளங்கள்* | *விளைவுகளினால் நிரப்பப்படுதல்* |
| --- | --- |
| நாள் 1: இருளிலிருந்து வெளிச்சம் (வெளிச்சம் உண்டாக்கப்பட்டு, இருளிலிருந்து பிரிக்கப்பட்டது; 1:3-5) | நாள் 4: சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் (இரவையும், பகலையும், ஆளுவதற்கு ஆகும்; 1:14-19) |
| நாள் 2: தண்ணீரிலிருந்து வானம் (வானத்தின் மேலுள்ள தண்ணீர் பூமியின் கீழுள்ள தண்ணீரிலிருந்து பிரிக்கப்பட்டது; 1:6-8) | நாள் 5: பறவைகளும், மீன்களும் (வானிலும், பூமியிலும் உயிர் வாழ்வதற்கு ஆகும்; 1:20-23) |
| நாள் 3: வெட்டாந்தரையிலிருந்து சமுத்திரங்கள் (வெட்டாந்தரை விதைகளை பிறப்பிக்கும் பூண்டுக ளையும், செடி கொடிகளையும் முளைப்பித்தது; 1:9-13) | நாள் 6: மிருகங்களும், மனிதனும் (நிலத்தில் வாழ்வதற்கும், செடி கொடிகள் முளைப்பிப்பதை சாப்பிடுவதற்கும் ஆகும்; 1:24-31) |

நாள் 7: நிறைவு மற்றும் "மிகவும் நல்லது" - தேவன் ஓய்ந்திருந்தார் (2:1-3)

சிருஷ்டிப்பின் தொகுப்பானது, அகிலத்தைக் குறித்ததான ஒரு முறைமையையும், தெய்வீக வடிவத்தையும் காட்டுகிறது. இது ஒரு பிரபஞ்சத்தின் விபத்தாகவோ அல்லது இயற்கை விதி முறையின் விளைவாகவோ வந்தது அல்ல. மாறாக, தம்முடைய வார்த்தையால் உண்டாக்கினதுமல்லாமல், தம் எல்லா படைப்புகளும் விசேஷமாக மனிதனும் பராமரிக்கப்படவும், புதுப்பிக்கப்படவும் தெரிந்து கொண்டது சர்வ வல்லமையும் அன்பும் கொண்ட தேவனின் சித்தத்தின் விளைவாய் இருந்தது (பார்க்க சங். 104).

வேதமானது, தேவன் இருக்கிறார் என்பதை குறித்ததான தத்துவங்களின் விவாதங்களால் துவங்காமல், தேவன் இருக்கிறார் என்பதையும், அவரே எல்லாவற்றிற்கும் படைப்பின் காரணர் என்பதையும், கணிக்கும்படி செய்கிறது. வேதத்தில் கொடுக்கப்பட்ட தேவனின் செய்தியானது, தேவனின் படைப்பாற்றல் பற்றிய செய்தியுடன் துவங்குகிறது.

## "தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் ..." (1:1, 2)

**[1]ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். [2]பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.**

**வசனம் 1.** சிருஷ்டிப்பானது எபிரெய பதமான בְּרֵאשִׁית *b$^e$re'shith* என்னும் தேவனின் படைப்பாற்றல் பற்றிய **ஆரம்பத்தை** குறிக்கும் பதத்தால் துவங்குகிறது. பழமை வாய்ந்த வேதாகமத்தின் பாரம்பரிய மொழி பெயர்ப்புகளிலும், வசனம் 1 ஒரு தனி வாக்கியமாகவே இருக்கிறது. கிறிஸ்துவுக்கு பிறகு 800ம் வருடம், எபிரெய வேதங்களில் உயிர் குறில் மற்றும் உச்சரிப்பை கொடுத்த மாசோரைட்ஸ் (யூத வேதபாரகர்கள்) அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதாக இருக்கிறது. NASB போன்றே, அநேக ஆங்கில மொழிபெயர்ப்புகள் (KJV; ASV; RSV; JB; NIV; NKJV; REB; NCV; CEV; NLT; ESV) இந்த வசனத்தை ஒரு தனி வாக்கியமாகவே மொழிபெயர்த் துள்ளன. மற்றும் இந்த அர்த்தமே விளக்கவுரையிலும் கடைப்பிடிக்கபடுகிறது.[1] 1-ம் வசனம், அந்த அதிகாரத்தின் மற்ற வசனங்களுக்கெல்லாம் ஒரு தலைப்பாக மற்றும் முன்னுரையாக இருக்கிறது (1:2-31). இது வம்சாவழிகளை குறிக்கும் வாக்குமூலங்களோடு 5:1; 6:9; 10:1; 11:10 ஆகிய வசனங்களில் ஒத்துப்போகிறதாயிருக்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட வம்சாவழியும், அதை தொடர்ந்து வருபவைகளுக்கு முன்னுரையாக, ஒரு தனித்து நிற்கும் வாக்கியத்தோடு துவங்குகிறது.[2]

**தேவன்** (אֱלֹהִים, *'Elohim*) என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது "யாவே" அல்லது "எல்ஷடாய்" போன்று, ஒரு ஆளுக்குரிய பெயர் அல்ல. இது இந்த அதிகாரத்திற்கு மிகவும் பொருத்தமானது. ஏனென்றால், இங்கு தேவன் (*'Elohim*) என்னும் பொருளை குறிக்கும் பதம், யெகோவா என்னும் இஸ்ரவேலின் உடன்படிக்கையின் தேவனைக் குறிப்பதல்ல, சர்வ சிருஷ்டியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனை குறிப்பதாக உள்ளது.

மேலும், அந்த வேதவாக்கியம் தொடர்ந்து கூறுவது, தேவன் **வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்,** வேறுவிதமாகக் கூறுவ

தென்றால், முழு பிரபஞ்சத்தையும் தேவன் சிருஷ்டித்தார். இந்த בָּרָא (*bara'*) என்னும் எபிரெய வினைச்சொல், தேவனை மாத்திரமே எழுவாயாக பழைய ஏற்பாட்டில் எடுத்துக் கொள்கிறது; மனிதனுடையதாக அல்லாமல், தேவனுடைய படைக்கும் செயலையே எப்போதும் விளக்குகிறது.[3] இது ஏற்கெனவே இல்லாத ஒன்றிலிருந்தோ; (ஏசாயா 43:15, 16; 65:18; எரே. 31:22 ல் போல) அல்லது ஏற்கெனவே உள்ளவற்றிலிந்தோ (சங். 89:12; ஏசாயா 45:12 ல் போல) பெரும்பாலும், புதிதாக ஒன்றை உருவாக்குதல் என்பது விசேஷ விதமாக இருக்கிறது. ஆதியாகமம்1-ஐப் பொறுத்த வரையில் தாமதமாக உறுதி செய்யப்படுகிறது. இந்த வசனம் *எக்ஸ்நிகிலோ* (ஒன்றுமில்லாமையிலிருந்து) இந்த உலகத்தை உருவாக்கினார் என்று குறிப்பிடவில்லையென்றாலும் அப்படியே அர்த்தப்படுகிறது, ஏனெனில் அவர் வார்த்தையினாலே, கடினமின்றி சிருஷ்டித்தார். எபிரெயரில் இதன் அர்த்தம் மிகவும் சிறப்பாக விளக்கப்பட்டிருக்கிறது. "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப் பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப் படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும், அறிந்திருக்கிறோம்" (எபி. 11: 3).

**வசனம் 2.** முதலாம் வசனத்தில், வானத்தையும், பூமியையும் உண்டாக்கின, சிருஷ்டிப்பின் முன்னுரையைக் கொடுத்த பிறகு, ஆசிரியர் தன் கவனத்தை பூமியின் மேல் திருப்புகிறார், **பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது** என்று (תֹהוּ וָבֹהוּ, *thohu wabohu*) விவரிக்கிறார். வேறு வார்த்தையில் சொல்வதென்றால், அது ஒழுங்காக இல்லாதிருந்தது. இது போன்ற உயிரில்லா, ஒழுங்கற்றதானது, ஆறாம் நாளின் முடிவில் விவரிக்கப்பட்ட சிருஷ்டிப்பின் முறைமைக்கும் அழகுக்கும், உயிருக்கும் எதிரானது. இந்தתֹהוּ (*thohu*) மற்றும் בֹהוּ (*bohu*) என்னும் இரு எபிரெய பதங்களும் பழைய ஏற்பாட்டில் இரண்டு பகுதிகளில் மட்டுமே ஒன்றாக சேர்ந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு இடங்களிலும் துன்மார்க்கமான நாடுகள் மேல், தெய்வீக நியாயத்தீர்ப்பைக் குறிப்பதாக உள்ளது. முதல் பத்தியானது, கர்த்தருடைய பட்டயம் என்பதைக் குறிக்கிறது, "வானங்களில் என் பட்டயம் வெறிகொண்டது: இதோ ஏதோமின் மேலும், நான் சங்காரத்துக்கு நியமித்த ஜனத்தின் மேலும், அது நியாயஞ்செய்ய இறங்கும்" (ஏசாயா 34:5), மற்றும் ஏசாயாவில் தேவ நியாயத்தீர்ப்பின் விளைவானது வெட்டவெளியுமாய் (*thohu*), வெறுமையுமாய் (*bohu*) இருக்கிறது (ஏசாயா 34:11).

மற்றொரு பத்தியானது எரேமியாவிலிருந்து வருகிறது. தீர்க்கதரிசியானவர், எருசலேமிலும், யூதேயாவிலும், அவர்களின் விக்கிரக ஆராதனை மற்றும் குற்றம் குறித்த அழிவை உரைக்கிறார். ஒரு தரிசனத்தில், சிருஷ்டிப்பிற்கு எதிர்மாறாக, பாபிலோனியர் களின் படை

மீதமிருந்த யூத சொந்த பூமியையும், தலைநகரத்தையும் அழித்துப் போடுகிறது. வல்லமையான கவிதை சார்ந்த கற்பனையில், பூமியானது சிருஷ்டிக்கப்படும் முன் தன் உண்மை நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதாக விவரிக்கிறது. எல்லா நகரமும் அழிக்கப்பட்டுவிட்டது. இங்கே, மனிதனோ, பறவைகளோ, செடி கொடிகளோ, வெளிச்சமோ இல்லை. பூமியானது, மறுபடியும் "ஒழுங்கின்மையும்" (*thohu*). "வெறுமையுமாய்" இருந்தது (*bohu*) (எரே. 4:23). இந்த இரண்டு பதங்களும் சேர்ந்து வந்து தீர்க்கதரிசனவாயிலான அழிவை உரைப்பது, ஆதியாகமம் 1:2-31-ல், அந்தகாரமும், ஒழுங்கின்மையும், வெறுமையும் என்பவைகள் வெளிச்சம், அழகு, சீரான நிலை மற்றும் அர்த்தங்களினால் மாற்றப்படும் வரை "நல்லது" என்று சொல்ல முடியாது.

இந்த **ஆழத்தின் மேல் இருள் இருந்தது** என்ற வாக்கியத்திலுள்ள பதங்களான, "இருள்" மற்றும் "ஆழம்" என்பது அமங்கலமான விதத்தில் இணைக்கப்பட்டிருந்தபடியால், அவைகளை சக்திகளாக வேபண்டைய கால மக்கள் பார்த்தனர். இயற்கை சார்ந்த ஒவ்வொன்றும் இந்த அசசுறுத்தும் தன்மையுடையதாகவே புரிந்து கொள்ளப்பட்டது. அநேக நாட்களாக, "ஆழம்" என்பதற்கான எபிரெய வார்த்தைתְּהוֹם (*th$^e$hom*), அக்காடியன் *Tiamat* தையமாத் என்பதிலிருந்து வந்ததாக கருதப்பட்டது, அது பழங்கால பாபிலோனிய தேவதையின் பெயர் "ஆழம்" ஆகும். ஐதீகத்தின் அடிப்படையில், ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கிற்கு வருவதற்கு முன்பு, தையமாத் என்பது மர்துக்கினால் அதன் தலை வெட்டப்பட வேண்டும் (எல்லா தெய்வங்கள் மேலும் இராஜ்ஜியம் செய்ய வேண்டும் என்று விருப்பமுள்ள ஒரு இளம் தெய்வமாகும்).[4] ஆயினும், குறுகிய காலத்திற்கு முன்பு இந்த தத்துவத்திற்கு எதிராக மிக வலுவான விவாதங்கள் வைக்கப்பட்டன, ஆகவே *t$^e$hôm* "டெகோம் பன்மொழிபாஷையின்படி வந்தது, Tiamat தையமாத்திலிருந்து வந்திருக்க முடியாது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது,"[5] ஆதியாகமத்தின் ஆக்கியோன் பெயரிடுதலுக்கு பாபிலோனின் புராணத்தை சார்ந்திருக்கவில்லை. உண்மையாக, *th$^e$hom* தெகோம்-மிற்கு ஆள்தத்துவம் எதுவும் வேதாகமத்தில் இல்லை, தேவன் வெளிச்சம், உயிர்கள், மற்றும் அழகான உலகத்தைப் படைப்பதற்கு முன்பு தோற்கடிக்க வேண்டிய எந்த வல்லமையான சக்தியையும் வேதாகமத்தில் நாம் எங்கும் காணவில்லை. எதிர் பதம் உண்மையானது, ஒழுங்கீனமான பூமிக்கு மேல் மிகுந்த ஆழமும் இருளும் இருந்ததாக மாத்திரமே வார்த்தை சொல்கிறது. தேவன் தமது சிருஷ்டிப்பின் செயலான மனிதன், காட்டு, நாட்டுமிருகங்கள், பறவைகளிலிருந்து விதவிதமான கடல் வாழ்வனவற்றை பிரித்தும், ஒருங்கிணைத்தும் வைக்கும்போது இவைகள் பிரிக்கப்பட்ட இருப்பிட எல்லைகளுக்குள் வைக்கப்பட வேண்டியவை களாயிருந்தன.

**தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.** என்றும் வசனம் கூறுகிறது, *'Elohim* (தேவன்) என்ற வர்த்தையுடன் இணைந்து רוּחַ (*ruach*) என்னும் எபிரேய பதம் வரும்பொழுது, "காற்று" அல்லது "ஆவி" என்ற அர்த்தத்தைத்தருகிறது. இது "தேவனிடத்திலிருந்து வந்த காற்று" (NRSV) அல்லது "வல்லமையுள்ள காற்று" (NAB) என்ற அர்த்தம் கொண்டதாகவும் இருக்கலாம். ஆனாலும், இந்த மொழிபெயர்ப்புகள், சாத்தியமில்லாததாகவே காணப்படுகிறது. ஏனெனில், பழைய ஏற்பாட்டில் மற்ற பதினைந்து இடங்களில் வருவது எந்த இடத்திலும் "வல்லமையுள்ள காற்று" என்ற அர்த்தத்தை குறிக்கவில்லை.

ஆதியாகமம் 23:6 ல் *'Elohim* என்னும் பதம் "பெயர் சொல்லாக" இல்லாமல் "உரிச்சொல்லாக" பயன்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, அங்கே ஆபிரகாம் "வல்லமையுள்ள பிரபு" (அல்லது "மகா பிரபு"; ASV) என்று அழைக்கப்படுகிறான் இந்த வார்த்தையின் புரிந்துகொள்ளுதல் ஆதியாகமம் 1ம் அதிகாரத்தின் சூழலுக்கு பொருந்தினதல்ல. ஆதியாகமம் 1:2-ல் வரும் *'Elohim*, இந்த அதிகாரத்தில் மற்ற முப்பத்தொரு முறை வரும் அர்த்தத்திற்கும் எவ்வாறு உண்மையான ஒரு எபிரெய மொழி பெயர்ப்பாளர். அவைகள் எல்லாமே சாதாரணமாக "தேவன்" என்று ஒரே அர்த்தப்படும் போது எப்படி வேறுபடுத்திக் காட்ட எதிர்பார்க்க முடியும்?

*Ruach* என்னும் பதம் வல்லமையுள்ள தேவபிரசன்னத்தின் வெளிப்பாட்டின் அர்த்தமாக "காற்று" பயன்படுத்தப்பட்டுள்ள போது அது அழிக்கும் ஆற்றலுள்ளதாக அர்த்தம் கொண்டதாயுள்ளது. உதாரணமாக, யாத்திராகமம் 15:10, "உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர். கடல் அவர்களை [பார்வோனின் சேனை] மூடிக்கொண்டது, திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்து போனார்கள்" என்று தேவனைப்பற்றிக் கூறுகிறது (பார்க்க ஏசாயா 11:15; 40:7; ஓசியா 13:15). ஆதியாகமம் 1-ன் *ruach 'Elohim* என்னும் பதத்தை அப்படி பயன்படுத்த தடை செய்கிறது. அழிக்கும் வல்லமையுள்ளதாக பயன்படுத்தப்படுவதற்கு மாறாக, ஆதியாமத்தில் துவங்கும் சிருஷ்டிப்பின் நடக்கையாக, நிர்மாணித்தலின் பகுதியாக *ruach 'Elohim* காணப்படுகிறது.

வசனமானது பூமியிலுள்ள தண்ணீர்கள் மேல் தேவனுடைய ஆவியானவர் அசைவாடுகிறார் "காற்று" பயன்படுத்தப்பட்டுள்ள (מְרַחֶפֶת, *m^erachepeth*) என்று குறிப்பிடும் போது, அதன் செயல்பாட்டு வினைச் சொல்லாக ஆவியானவர் தண்ணீர்கள் மேல் "வட்டமிடுகிறார்" (NIV; ESV) என அர்த்தப்படக்கூடும். இவ்வாறாக அர்த்தப்படுத்துவதற்கான காரணம், மற்றொரு பகுதியில் கழுகு தன் குஞ்சுகளை பாதுகாக்கும் விதமாக "வட்டமிடு" வதிற்கு (רָחַף, *rachap*) இணையாகயாவே அர்த்தப்படுத்தப்படுகிறார் (உபா. 32:11). இவ்விதமாக ஆதியாகமம் 1ன்

கூற்று அர்த்தம் கொள்ளு மேயானால், தண்ணீர்களின் ஆழத்தில் ஒழுங்கீனமான சூழ்நிலையின் மத்தியில் தேவனுடைய ஆவியானவர் பாதுகாப்பாக தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவருடைய சிருஷ்டிப்பின் முதல் நிலையிலிருந்து தேவன் பேசி, ஒழுங்கு, உயிரினம், அழகு ஆகியவற்றைக் கொண்டு வருவதற்கு கால அவகாசமே வேண்டியதாயிருந்தது.

## நாள் 1: வெளிச்சம் உண்டாக்கப்பட்டு, இருளிலிருந்து பிரிக்கப்பட்டது (1:3-5)

**[3]தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. [4]வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். [5]தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று.**

**வசனம் 3.** கிரமமான செயல்பாட்டின் சிருஷ்டிப்புத் துவக்கமானது, தேவனுடைய வார்த்தை பேசப்பட்டதனால் செயலில் வந்தது. தேவன் … சொன்னார் என்ற கூற்றானது, அதிகாரம் மற்றும் மீதமுள்ள வசனங்களிலும் எழுத்தாளர் பின்பற்றும்படி ஒரு தொனியையும், ஒரு மாதிரியையும் ஏற்படுத்துகிறது. இதை விளக்க சங்கீதக்காரன். "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" என்றான் (சங். 33:6, 9). இந்தப் பகுதியில் "வார்த்தை" மற்றும் "சுவாசம்" ஆகியவற்றிக்கு இடையே (*ruach*, "spirit") ஒரு இணை காணப்படுகிறது, தேவன் பேசினபோது, அவருடைய ஆவியின் சிருஷ்டிப்பின் சக்தியையும் வெளிப்படுத்தினார், ஆகவே அவர் சொன்னது நடந்தது.

முதன் முதலில் பதிவு செய்யப்பட்ட சிருஷ்டிகரின் வார்த்தையானது ஒரு கட்டளை ஆகும்: **வெளிச்சம் உண்டாகக்கடவது**"; **வெளிச்சம் உண்டாயிற்று**, பிரபஞ்சத்திற்கு ஒழுங்கையும் மற்றும் அழகையும் கொண்டு வர முதல் வேலையாக வெளிச்சத்தின் சிருஷ்டிப்பு இருந்தது. இது ஒரு இயற்கையான அல்லது பொருள் சார்ந்த வெளிச்சமாக இருந்தது ஏனெனில், அது இல்லாமல், அனைத்தும் ஒழுங்கின்மையும் மற்றும் அந்தகார வடிவப் பிரதேசமாக இருந்திருக்கும். சூரியனை சிருஷ்டிக்கும் மூன்று நாட்களுக்கு முன்பே தேவன் வெளிச்சத்தை சிருஷ்டித்துவிட்டார், என்ற உண்மையானது படிப்பவர்கள் குழப்பமடையத் தேவையில்லை, ஏனெனில் முதல் நாளில் சூரியன் அல்லாது, அந்த வெளிச்சமானது வேறு ஆதாரத்திலிருந்து ஒளிரும்படிக்கு தேவன் செய்தார், என்பதை மாத்திரமே ஆதியாகமத்தின்

எழுத்தாளர் உறுதிப்படுத்துகிறார். வேதாகமத்தில் வெளிச்சமும் இரவும் இரண்டும் குறிப்பிடும் விதமாகவும் சம அளவிலும் தனிப்பட்ட விதத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது, உதாரணமாக எகிப்து முழுவதும் மூன்று நாட்களுக்கு இருள் சூழ்ந்திருந்தது, அது எகிப்தியர்கள் வீடுகள் முழுவதும் இருந்தது; ஆனால் இஸ்ரவேலர்கள் வீடுகள் முழுவதும் வெளிச்சம் இருந்தது (யாத். 10:21-23) மேலும், வனாந்திரத்தில் இஸ்ரவேலர்களின் பாளையம் இருளினால் சூழ்ந்தது; ஆனால் ஆசரிப்புக்கூடாரத்தின் மேல் அக்கினி ஸ்தம்பம் ஒளிர்ந்து கொண்டிருந்தது, அது தேவனுடைய ஜனங்களுக்கு வெளிச்சம் கொடுத்தது (எண். 9:15-18; பார்க்கவும் யாத். 13:20-22).

ஆவிக்குரிய அர்த்தத்தில், இருளிலிருந்து வெளிச்சம் தனிப்பட்டிருத்தல் என்பது, தீமையிலிருந்து நன்மை வேறுபட்டிருப்பதன் விசேஷ ஆதாரமாக இருக்கிறது. வெளிச்சம் என்பது அதிகமாக நீதியின் மண்டலமாகவும், ஜீவனின் உருவகமாகவும் (சங். 37:6; 56:13), ஞானமும், தேவனுடைய கட்டளைகளும் (யோபு 12:22; 24:13) மற்றும் இரட்சிப்பும் தேவனுடைய பிரசன்னமும் (எண். 9:15, 16; சங். 27:1; ஏசாயா 9:2), பயன்படுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில், இருளானது, பாவத்தையும், துன்மார்க்கத்தையும் (யோபு 5:14; நீதி. 2:13; பிர. 2:14), மூட நம்பிக்கையையும், விக்கிரக ஆராதனையையும் (ஏசாயா 9:2; எசே. 8:12), மற்றும் நியாயத்தீர்ப்பு, மற்றும் மரணத்தையும் (சங். 105:28; எசே. 30:18; யோவேல் 2:2) குறிக்கிறது.

**வசனம் 4. வெளிச்சத்தை** உண்டாக்கின பிறகு, **தேவன்** ஒரு பிரதான கலைநுட்ப வல்லுநராக, தமது வேலையைக் **கண்டார்**, வெளிச்சத்தின் அழகைக் கண்டு வியந்தார். ஆகவே, அவர் **வெளிச்சத்தை இருளினின்று பிரித்து, அது நல்லது** என்று அறிவித்தார். இந்த "நல்லது" (*tob*) என்னும் பதம் நீதி நெறி அடிப்படையில் நல்லது என்று அர்த்தம் அல்ல, மாறாக, தமது நோக்கத்தை செய்ய ஏற்றதும், தகுதியுடையதுமாயிருந்தது, அவருடைய சிருஷ்டிப்பின் அழகை வெளிப்படுத்தவும், உயிர்கள் வாழ்தற்கு ஏற்ற சூழலை உண்டாக்கும் சக்தியை வழங்கும்படிக்கும் இருந்தது. தேவன் வெளிச்சத்தை இருளிலிருந்து பிரிக்கும் போது, ஏற்கெனவே இருந்த இருளை அவர் அகற்றவோ அல்லது அழிக்கவோயில்லை. மாறாக, அவைகள் முறையாக வேறுபட்டிருக்கும்படி பிரித்திருந்தார். ஒவ்வொன்றும், அதினதின் காலத்திற்குட்பட்ட முறையில் செயல்படும், அது போலவே, ஒன்று தன் காலத்தில் செயல்பட்டதைத் தொடர்ந்து அடுத்தது செயல்படுகிறது.

**வசனம் 5. தேவன் வெளிச்சத்துக்கு பகல் என்று பெயரிட்டார், இருளுக்கு இரவு என்று பெயரிட்டார்.** ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் முழுவதும், தாம் படைத்த எல்லாவற்றிற்கும் சிருஷ்டிகர் பெயர் வைத்தார் என்று எழுத்தாளர் வலியுறுத்தினார். அவர், வெளிச்சத்துக்கு

“பகல்” என்றும், இருளுக்கு “இரவு” என்றும் பெயரிட்டார் (1:5). ஆகாய விரிவை “வானம்” விரிவடையவும் (1:8), வெட்டாந்தரையை “பூமி” என்றும், சேர்ந்த தண்ணீரை “சமுத்திரம்” என்றும், (1:10) பெயரிட்டார். மேலும், அவர் ஆணையும், பெண்ணையும் “மனிதன்” (אָדָם, *’adam*) அல்லது “மனுக்குலம்” என்று அழைத்தார் (1:27; 5:1, 2 விவர்ணத்தைக் காண்க). பழைய ஏற்பாட்டில் ஒன்றை பெயரிடுவது அதன் மேல் கொண்ட ஆளுமையை உறுதிப்படுத்துகிறது (2:20, 23; 3:20; 4:25; 2 இராஜா. 23:34; 24:17 காண்க) இந்த விதமாக, தமது திட்டத்தில் செயல்படும்படிக்கு, பெயரிடப்பட்ட படைப்புகளுக்கு ஏற்ற பங்கை வடிவமைத்தார்.

***சாயங்காலமும், விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று.*** ஒவ்வொரு நாள் சிருஷ்டிப்பின் முடிவிலும், ஆசிரியர் தனது பத்தியை ஒரே வித விளக்கத்தோடு முடிக்கிறார், புதிய நாட்களின் முடிவிலும் ஏற்ற எண்ணிக்கையை வழங்குகிறார் (1:8, 13, 19, 23, 31). எபிரெய சிந்தையில் ஒரு நாள் இருட்டுடன் துவங்குகிறது (பார்க்க 1:2) வெளிச்சத்தின் சிருஷ்டிப்பு அதை தொடர்ந்து வருகிறது; பின்பு இரவு தொடங்கும் வரை நீடிக்கிறது, அப்போது அடுத்த நாள் துவங்குகிறது.

## நாள் 2: தண்ணீரானது வெட்டாந்தரையிலிருந்து பிரிக்கப்பட்டது (1:6-8)

**6பின்பு தேவன்: ஜலத்தின்மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். 7தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக் கினார்; அது அப்படியே ஆயிற்று. 8தேவன்: ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று.**

**வசனங்கள் 6-8. தேவன்** மீண்டும் பேசினார், அதன் விளைவாக **ஆகாயவிரிவு** சிருஷ்டிக்கப்பட்டது, **அது மேலே இருந்த தண்ணீரை அதற்கு கீழே இருக்கும் தண்ணீரிலிருந்து பிரித்தது**. ஆகாயவிரிவு எபிரெய பதத்தில் רָקִיעַ), *raqia‘*) என்னப்படும். இதன் அர்த்தம் “படர்ந்த” அல்லது “அடித்து விரிக்கப்பட்ட” (உலோகத் தகடுகள்) அர்த்தத்தை குறிக்கிறது. சில இடங்களில் அதன் தொடர்புடைய வினைச்சொல்லான (רָקַע, *raqa‘*) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. கடின உலோகத்தை அடித்து விரிக்கப்பட்ட (யாத். 39:3; எண். 16:39 [17:4]; ஏசாயா 40:19; எரே. 10:9; காண்க. யோபு 37:18) என்ற அர்த்தத்தை காட்டுகிறது. “எபிரெயர்களால், கடினமானதாக, அதன் மேல் நீரைத்

தாங்கத்தக்கதாக," கருதப்படும் *Raqia'* என்ற எபிரெய "பதத்தை 'வானம் அல்லது ஆகாயவிரிவின் மண்டபம்'"[6] என்று விளக்க இது சில வல்லுனர்களை வழிநடத்தியது (பார்க்க KJV).

இது தெளிவானதாக இருக்கிறது, ஆயினும், *raqia'* என்பது உறுதியான அரண் அல்லது மண்டபமாக ஆதியாகமத்தின் எழுத்தாளர் புரிந்துகொள்ளவில்லை, காரணம் "ஆகாயவிரிவு" (שָׁמַיִם, *shamayim*, ஷாமாயிம்) அல்லது "வானம்" (NIV) **என்று தேவன் அழைத்தார்** என்று உறுதியளிக்கிறார். சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் அதில் வைக்கப்பட்டுள்ளன என்றும் (1:14-17), "திறந்த வானங்களின் விரிவு" என்றும் குறிப்பிடுகிறார், அங்கே பறவைகள் பறக்கின்றன (1:20), அதுவே ஆகாய மண்டலம் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டுகிறார்.[7] உலோகம் அல்லது கண்ணாடியினால் செய்யப்பட்ட உறுதியான மண்டபம் போன்றது என்று அவர் நிச்சயமாகப் புரிந்துகொள்ளவில்லை. மாறாக, ஆகாயவிரிவை அபூர்வத் தோற்றத்தின் வழியாக அவர் விவரிக்கிறார். சூரியனையும் நட்சத்திரங்களையும் ஆகாயத்தில் இருப்பதாக மனிதன் காண்கிறான் ஆனால் அதே வேளையில், பறவைகளோ ஆகாயத்திற்குள் சுலபமாக பறக்கின்றன. இந்த வசனங்களில் ஆகாயவிரிவு என்பது கீழேயுள்ள தண்ணீரிலிருந்து மேலேயுள்ள தண்ணீரைப் (மேகங்கள்) பிரிக்கிறதாயிருக்கிறது.

ஆகாயவிரிவைக் (அல்லது வானம்) குறித்து வேதாகமத்தின் பார்வையானது பண்டையகால பாபிலோனிய படைப்பின் தொகுப்பிலிருந்து மாறுபடுகின்றது. *என்னுமாஎலிஸ்* - ன்படி கடற்தேவதை தயமத்தைக்மர்துக் தெய்வம் கொன்ற பின்பு, "அவன் அவளை சிப்பி மீன் போன்று இரண்டாகப் பிளக்கின்றான்". அவளுடைய முதல் பாதி பூமியில் விடப்பட்டது, அது கீழேயுள்ள தண்ணீரானது, அடுத்த பாதி (சிறையின்) மேற்கூரைப் போன்று வானங்களின் ஆகாயத்தில் உருவாக்கப்பட்டது. பின்பு "அவர் அதன் தண்ணீர் வெளியேற அனுமதிக்காதவாறு அவர் அதற்கு கட்டளையிட்டு,"[8] காவல்களை நியமித்தார். இந்த புராதணக் கதையில், ஆகாயமானது ஏற்கனவே இருந்த பொருளால் உள்ள உலோகத்தால் செய்யப்பட்டது, அது கடற்துர் தேவதையான, தயமத்தின் உடலின் பாதியாகும். அது தனது தீங்கிழைக்கும் தண்ணீரை கீழே பூமியில் ஊற்றாமல் பாதுகாக்கும்படிக்கு அதற்கு முர்துக்தாழிட்டு காவல் பண்ணினார். ஆகையால், இந்த புராதாணக் கதையில், ஆகாயத்திலுள்ள தண்ணீர்கள் எதிரி தெய்வமாகவும் அது கொல்லப்பட்டதும், தொடர்ந்து உறுதியான தடுப்புக்காவலில் வைத்து அதன் கொடூர அழிவிலிருந்து பூமியைப் பாதுகாக்கும் விதமாகவேப் பார்க்கப்படுகிறது. இது ஆதியாகமத்தின் எழுத்தாளரின் பார்வையிலிருந்து முற்றிலும் மாறுபடுகிறது, அல்லது மனுக்குலத்தை ஆசீர்வதிக்க ஏக்கமாயிருக்கும் பரலோகத்தின் அன்பான பிதாவைக் குறித்து "... நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்

மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார் என்று சொன்ன இயேசுவின் கண்ணோட்டமும் வித்தியாசப்படுகிறது" (மத். 5:45).

## நாள் 3: நிலம், செடிகள் மற்றும் மரங்கள் சிருஷ்டிக்கப்பட்டன (1:9-13)

**[9]பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. [10]தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார். [11]அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. [12]பூமியானது புல்லையும், தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார். [13]சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.**

**வசனங்கள் 9, 10.** ஆசிரியர் விரைவாக, ஆகாயவிரிவிலுள்ள "தண்ணீர்களிலிருந்து" பூமியிலுள்ள தண்ணீர்களைப் பற்றி விளக்குகிறார். மிருகங்களும், மனிதனும் பூமியிலிருக்கும்படியே பூமிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (1:24-31); ஆனாலும், பூமியானது இவர்கள் வாழும்முன், **வெட்டாந்தரையானது, தண்ணீரிலிருந்து** பிரிக்கப்பட வேண்டியதாய் இருந்தது. தேவன் நிலத்தில் வாழ்பவர்களுக்கு எல்லைகளை ஸ்தாபித்தார். தேவன் இந்த வெட்டாந்தரையை **பூமியென்றும்**, தண்ணீர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, அதை சமுத்திரம் என்றும் அழைத்தார். மறுபடியும், தேவன் அவரது **கிரியையை** நல்லது என்றார்.

**வசனங்கள் 11-13.** நிலத்தில் வாழும் படைப்புகளான மிருகங்கள் மற்றும் மனிதனுக்கு வாழ்வதற்கு நிலம் ஒன்று மட்டுமே அவசியமானதல்ல, ஆனால் அவர்கள் வாழ்வதற்கு, எல்லா விதத் **தாவரங்களும்** அவசியமானதாகவும் உள்ளன. **பூமியானது** அபரிவிதமாக **புல் பூண்டுகளை** முளைப்பிக்க வேண்டுமென்று **தேவன்** கட்டளையிட்டார். சிலர் சொன்னது போன்று, இந்த சக்தி உருவாக்கமானது இயற்கையின் தெய்வமாக்காது (பூமாதேவி). தாவரங்களை விளைவிக்க பூமிக்கு சொந்த சக்தி கிடையாது; மாறாக, தேவனுடைய வார்த்தையின் சிருஷ்டிப்பின் வல்லமை மூலம், தேவன் ஒருவரால் மட்டுமே தாவரங்கள் முளைத்து வளர வைக்க முடியும்.

இதற்கு இணையான சங்கீதக்காரனின் வார்த்தைகள். "பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார்" (சங். 104:14).

தாவரங்களின் வாழ்க்கை தொடரவும் பெருகவும் அவைகள் **தங்கள் தங்கள் சாதி விதைகளை விளைவிப்பதன் மூலம் தேவன்** செய்கிறார், ஆகவே மிருகங்களுக்கும் மற்றும் மனிதர்களுக்கும் போதுமான உணவு கிடைக்கும். இது பூமியின் மேல் அநேக வெவ்வேறு சுற்றுச் சூழலுக்கு ஏற்றபடியும் மற்றும் தகுதிவாய்ந்ததாக இருக்கக் கூடியபடியும் தாவரங்களின் வாழ்க்கைக்கு இது வழி நடத்திற்று.

இவைகளெல்லாம், நிச்சயமாக பழைய கிழக்கத்திய புராணங்களுக்கு முரண்பாடானதாக இருக்கிறது. உதாரணமாக, கானானில், பாகால் (உற்பத்திகளின் தெய்வம்) வருஷத்தின் முடிவில், மோத்தின் ("மரணத்தின்" தெய்வம்) கைகளால் மரணமடைந்ததாக நம்பப்படுகிறது. விளைவாக, கோடைக்கால அறுவடைக்குப் பிறகு பயிர் வகைகளையும் முளைப்பிக்கிற செடி கொடிகளையும் அழித்துவிடும். அதற்கு பிறகு, மோத் பாதாளத்திற்கு பாகாலை கொண்டுபோய் விடும்; ஆனால், அனாத் என்னும் பெண் தெய்வம் ஒரு இரத்த போரில் மோத்தைக் கொன்று இளவேனிற் காலத்தில் பாகாலை மீட்கும். அதற்குப் பின் பாகால் உயிர்பிக்கப்பட்டு, அனாத்துடன் இல்லற உறவு கொள்ளும், இந்த உறவு, பூமியில் மிருகங்களுக்கும், மனிதனுக்கும் தேவையான புது பயிர் வகைகளை பிறப்பிக்கும்.[9]

அநேக பழங்கால மத சம்பந்தமான புராணங்களிலும் வளங்களின் சடங்காச்சாரங்களிலும், பக்தர்களும், புனித வேசிகளும் சயனிப்பதாலே உருவாகிறது என்ற ஒரே மாதிரியான கதைகளை கொண்டுள்ளன (பார்க்க ஓசியா 4:11-14). இந்த தீய பழக்கங்களே தெய்வங்களை ஆர்வத்துடன் செய்யத்தூண்டி அதன் மூலம் திரளான வளங்களையும், கனியையும் பிறப்பிக்கவும் அதே போன்று மிருகங்களுக்கும், மற்றும் மனுஷனுக்கும் சந்ததிகளைப் பிறப்பித்தது. இந்த அசுத்த தீய செழிப்பின் கதைகளுக்கு மாறாக, சர்வவல்லமையுள்ள தேவன் சமுத்திரத்தை வெட்டாந் தரையிலிருந்து பிரித்து, அதை வளம் நிறைந்த நிலமாக்கி (ஊட்டச்சத்து தரும்), பலவித பயிர்களையும், பழங்களையும், தருவதாய் உண்டாக்கினார் என்று ஆதியாகம வசனங்கள் பதிவு செய்தியிருக்கின்றன மேலும், அதினதின் உயிர் கொண்ட விதைகளால் அவைகள் சுயப்பெருக்கம் கொள்ளவும் கட்டளையிட்டார் - இவையெல்லாம் நம் ஜீவனுள்ள சிருஷ்டிப்பின் ஒரே தேவனாகிய வாழ்வின் உண்மையான கர்த்தரிடமிருந்து வந்தது. பின்பு **மூன்றாம் நாளின்** முடிவில் அவர் சிருஷ்த்து முடித்தவைகளை **நல்லது** என்று கண்டார்.

## நாள் 4: சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் வானத்தில் வைக்கப்பட்டன (1:14-19)

**[14]பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம்
உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள்
உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும்
காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிற தற்காகவும்
இருக்கக்கடவது என்றார். [15]அவைகள் பூமியின்மேல்
பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே
சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. [16]தேவன்,
பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய
இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும்
உண்டாக்கினார். [17]அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும்,
[18]பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும்
வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற
ஆகாயவிரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.
[19]சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று.**

**வசனங்கள் 14, 15.** அண்ட சராசரங்களின் படைப்பு - சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் - இந்த அதிகாரத்தில் மனிதனின் படைப்பைத் தவிர மிகவும் நீளமாக இந்த தொகுப்பு திரும்பத் திரும்பக் கூறப்பட்டதாகவும் உள்ளது. அண்டசராசரங்கள் குறித்து பண்டைகால மக்கள் கொண்டுள்ள எண்ணங்களின் மிக முக்கியத்துவத்தின்படி, நான்காம் நாளின் விவரங்களின் தொகுப்பு இடம் பிடித்துள்ளது. மொசெப்பொத்தோமியா, பாலஸ்தீனம், மற்றும் எகிப்தில், மனிதன் மற்றும் தேசங்களின் அன்றாட வாழ்வினைக் கட்டுப்படுத்துகிற சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் தெய்வங்களாக வணங்குகிறார்கள்.

இருப்பினும், ஆதியாகமத்தின் ஆசிரியர் அவைகளை சாதாரண **வெளிச்சமாக** குறிப்பிடுகிறார், அவைகள் மூன்று இயக்கங்களை செயல்படுத்தும்படிக்கு தேவனால் சிருஷ்டிக்கப்பட்டன: (1) **அவைகள் பகலை இரவிலிருந்து பிரிக்க வேண்டும்.** (2) அவைகள் கடந்துபோகும் காலத்தையும், பருவத்தையும் நாட்களையும் ஆண்டுகளையும் குறிப்பிடும் **அடையாளங்களாக** இருக்க வேண்டும். (3) **அவைகள் பூமிக்கு ஒளி கொடுக்க வேண்டும்.** பண்டையகால மக்களின் பார்வையில் அண்ட சராசரங்களுக்கு மத பக்தி கொடுக்கப்பட்டிருந்தன, அவைகள் தெய்வங்களும் அல்ல, சுயமாக இயங்கக் கூடியவைகளும் அல்ல, என்பதை வேதாகம தொகுப்பு முக்கியத்துவப்படுத்துகிறது. அவைகள் நித்தியமான வைகளுமல்ல; மாறாக, அவைகள் ஒரு சர்வ வல்ல தேவனின் சிருஷ்டிப்பின் ஆதாரங்களாயிருக்கின்றன - சேவிக்க அல்ல, சேவை செய்யவும் அவைகளைப் படைத்த தேவனின் சித்தப்படி

செய்யவுமே சிருஷ்டிக்கப்பட்டன (காண்க சங். 104:19-23).

**வசனங்கள் 16-19.** வார்த்தைகளின் பிரயோகத்தின் மூலம் நட்சத்திர உருவங்களின் சமகால கருத்துக்களின் பார்வையை ஆதியாகமத்தின் ஆசிரியர் எழுதியுள்ளார் என்பது புலப்படுகிறது. துவக்கமாக, வழக்கத்திற்கு மாறாக, சூரியன்: என்ற שֶׁמֶשׁ (*shemesh*) இயல்பான வார்த்தைக்குப் பதிலாக **பெரிய சுடர்** என்பதைத் தெரிந்து கொண்டார். இரண்டாவதாக, இயல்பான சந்திரன்: יָרֵחַ (*yareach*) என்ற வார்த்தைக்குப் பதிலாக **சிறிய சுடர்** என்று அவர் எழுதியுள்ளார். ஒருவேளை, வழக்கமான சூரியன், சந்திரன் வார்த்தைகளுக்குப் பதிலாக இவைகளை ஏற்றவைகளாக அவர் கருதியிருக்கலாம், வேறு செமிட்டிக் மொழிகளில் இந்த வார்த்தைகள் கடவுள்களின் பெயர்களாக இருப்பதும் இதற்கு காரணமாக இருக்கலாம். பெத்ஷெமேஷ், எரிகோ போன்ற சில கானானிய ஊர்கள் பல தெய்வ வணக்க அடையாளங்களை தன் பெயரிலே கொண்டிருக்கின்றன.[10]

அநேக பல தெய்வ வணக்கப் பெயர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தில், வரும் பல நூற்றாண்டு நிலைத்திருக்கும், **என்றாலும்** ஆதியாகமத்தின் ஆசிரியர் தனது மக்களுக்கு பதிலளிப்பது என்னவென்றால், அவர்களுடைய இலக்கு சூரியன், சந்திரன், மற்றும் **நட்சத்திரங்கள்** என்பவைகளில் இல்லை, எல்லாவற்றையும் படைத்த ஒன்றான மெய் தேவனில் இருப்பதை அவர்கள் நினைவு கொள்ள வேண்டும். வான கட்டமைப்பானது வானங்களின் **ஆளுகை** ("rule" or "rule over"; KJV; ASV) என்பது **பகலையும் இரவையும்** ஆளுகை செய்து அடையாளங்களாகவும் மற்றும் காலங்களை (நாட்களும் வருடங்களும்) உறுதிப்படுத்தியும் சேவை புரிகின்றன. பழங்கால மக்கள் இந்த கோள்களை வணங்கக்கூடாது, மேலும் அவை படைப்பின் ஒரு பகுதியும் சிருஷ்டிகரின் மகிமையை சாட்சி பகிர்வதுமேயாகும் (சங். 19:1-6).

முந்தைய நாட்களின் தேவனுடைய செயல்களைக் குறித்த கூற்றுக்களின் அடிப்படையில் பார்த்தால், **நான்காம் நாளில் சிருஷ்டிக்கப்பட்டது நல்லது** என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. நான்காம் நாளின் படைப்புகளான சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் (வெளிச்சம் கொடுக்கிறவைகள்), என்பவைகள் முதலாம் நாளில் சிருஷ்டிக்கப்பட்ட வெளிச்சத்திற்கும் மற்றும் அது இருளிலிருந்து பிரிக்கப்பட்டதற்கும் தொடர்புடையதாயிருக்கிறது.

## நாள் 5: ஜலங்களும், ஆகாயவிரிவும் சமுத்திரவாழ் ஜந்துக்களாலும், பறவைகளாலும் நிரப்பப்பட்டன (1:20-23)

**[20]பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம்**

**என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக் கடவது என்றார். [21]தேவன், மகாமச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். [22]தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக் கடவது என்றும் சொன்னார். [23]சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.**

**வசனம் 20.** நாள் இரண்டுக்கும் நாள் ஐந்துக்குமிடையே உள்ள தொடர்பு குறிப்பிடத்தக்கது. இரண்டாம் நாளில் தேவன் மேற்பரப்பு, கீழ்பரப்பு தண்ணீர்களைப் பிரித்து வானத்தில், பல விதமான உயிரினங்களுக்கு ஏற்றவாறு தங்குமிடமும், சுற்றுச் சூழலை ஏற்படுத்தினார். ஐந்தாம் நாளில், வானத்தை இருப்பிடமாகக் கொள்ளும் பறவைகளையும் (**திறந்த வெளியான**) நீரில் வாழும் ஜந்துக்களையும், சமுத்திரங்களிலும், கடல்களிலும், நதிகளிலும் (கீழ்மட்ட **நீர்கள்**) படைத்தார்.

இந்தப் பகுதி, தண்ணீர்கள் **திரளான ஜீவஜந்துக்களால் நிரப்பப்படுவதைக் குறிக்கிறது**. "Teem" (שָׁרַץ, *sharats*) என்ற வினைச்சொல் அதனோடு தொடர்புடைய பெயர்ச்சொல்லாகிய "swarms" (שֶׁרֶץ, *sherets*) "swarmers"[11] என்று பொருளுடைய கூட்டுப்பன்மைச் சொல்லாக வருகிறது. *Sherets* என்றால் விரைவாகச் செல்லும் பூச்சிகள், எலி, சிறிய ஊரும் பிராணிகள், பல்லிகள், போன்ற உயிரினங்கள் ஆகும். இந்த வசனப் பகுதியில், இந்த வார்த்தை பொதுவாக நீர்வாழ் உயிரினங்களையும், வேண்டுமானால் 21ம் வசனம் கூறும் "கடல்வாழ், மகாமச்சங்களையும்" குறிக்கிறது.

"உயிருள்ள பிராணிகள்" (נֶפֶשׁ חַיָּה, *nepesh chayyah*) என்பது "பூச்சிகளின் திரளுக்கு" எதிராக இருக்கிறது. இந்த வாக்கியம் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகும், 1:20, 21ல் நீர் வாழ்வனவற்றிற்கும், 1:24ல் நிலத்தில் வாழும் மிருகங்களுக்கும், 9:10ல் பறவைகளுக்கும் மற்றும் நிலவாழ் விலங்குகளுக்கும், 2:7 மனிதனுக்கும், 9:16 ல் விலங்குகளுக்கும் இது பொருந்தும். ஜீவசுவாசமுள்ள எல்லா உயிர் வாழ்வனவற்றையும் இது குறிக்கிறது (2:7 ன் விவர்ணத்தைப் பார்க்கவும்).

**வசனங்கள் 21-23.** *Bara'* ("சிருஷ்டி") என்ற சொல், இந்த அதிகாரத்தில் முதலாம் வசனத்திற்குப் பிறகு **காணப்படவில்லை**. ஆனால் 21ம் வசனத்தில் தான் காணப்படுகிறது. அதில் தேவன் படைத்த பிரதான மூன்று வகையான மிருகங்களின் வாழ்வைக் குறிக்கிறது. நீரில் துள்ளி நீந்தும் சிறிய மீன்களும், கடலின் தாழ்ந்த படுகையில் நீந்தக்கூடிய சிருஷ்டிகளும் இருந்தன. வான வீதியில் பறக்கக்கூடிய

பறவைகளும் இருந்தன. இறுதியாக மூன்றாவது வகையாக, விசேஷமாக ஆசிரியர், கடலில் **வாழும் மகா மச்சங்களை** (הַתַּנִּינִם הַגְּדֹלִים, *haththanninim haggedolim*) குறிப்பிடுகிறார்.

கடலில் வாழும் "மகா மச்சங்கள்" என்பதைக் குறிக்கும் எபிரெய மூல வார்த்தை תַּנִּין (*thannin*) என்பதாகும். அது "கடல் பாம்பு," அல்லது "வலுசர்ப்பம்,"[12] மற்றும் பாம்பு என்பவைகளையும் (யாத். 7:9), முதலை (எசே. 29:3) அல்லது ஒரு வகை வலிமையான உயிரினத்தையும் (எரே. 51:34) குறிக்கும். செய்யுள் இலக்கியத்திலும் தீர்க்கதரிசன இலக்கியத்திலும், தேவன் சத்துருக்கள் மீதான வெற்றிகளை குறிக்கும்படி உருவகமாக பயன்படுத்தியுள்ளார் (யோபு 7:12; சங். 74:13; ஏசாயா 27:1; 51:9). படைப்புத் தொகுப்பில் ஆசிரியர் தனது பிந்தைய கருத்தில் கூறாமல், நீர் வாழ் திமிங்கலங்கள், காண்டா மிருகங்கள், முதலைகள், மற்றும் கடலிலும், கடலுக்கு அருகிலும் காணப்படும் பெரிய உயிரினங்களைக் குறிக்கிறார்.

பல தெய்வ வணக்கப் புராணங்களில் கூறியிருப்பது போல், *thanninim* "தன்னினிம்" எனப்படும் மகா மச்சங்கள் ("sea monsters"), தேவனால் தோற்கடிக்க வேண்டிய எதிரிகள் **அல்ல**; மாறாக அவைகள் தேவனுடைய படைப்பின் ஒரு பகுதி என்றும், நல்லது என்றும் தேவனால் கூறப்பட்டவையும் ஆகும். மற்ற மிருகங்களைப்போல, அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப்பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள். ஐந்தாம் நாள் முடிந்ததும், "ஆசீர்வதிக்கும்" சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுகிறது, இது ஆதியாகமத்தின் மீதமுள்ள பகுதிகளில் முக்கிய இறையியல் நோக்கமாக ஊடுருவி செல்கிறது. இந்தப் புத்தகம் அடிக்கடி அவர் தமது சிருஷ்டிகளை ஆசீர்வதிக்கும் தேவனின் வாக்குத்தத்தம் நிறைவேறுதல் பற்றியதாக விவரிக்கப்படுகிறது.

## நாள் 6: மனிதன் மற்றும் மிருகங்கள் சிருஷ்டிக்கப்பட்டன (1:24-31)

இந்த கட்டத்தில் படைப்பின் இறுதி நாளைக் குறித்த விளக்கம் வழங்கப்படுகிறது. முந்தைய ஐந்து நாட்களைக் காட்டிலும் ஆறாவது நாளைக் குறித்து அதிக விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது, ஏனென்றால் தரை வாழ் மிருக ஜீவன்களையும் மனிதனையும் படைத்ததின் மூலம் தேவனின் மாபெரும் செயல்கள் உச்சக்கட்டத்தை அடைந்தது. மூன்றாவது நாள் வெட்டாந்தரையும் தாவரங்களும் அனைத்து விதமான புல்பூண்டுகளும் தோன்றின, ஆகவே அதற்கு தொடர்புடையதாக, ஆறாம் நாளின் படைப்பான மிருக ஜீவன்களும் (1:24, 25), மனிதனும் (1:26-28) வெட்டாந்தரையை நிரப்பினர். கூடுதலாக ஒரு கருணையுள்ள பரிசாக அனைவரும் உயிர்வாழும்படி

தேவன் தாவரங்களின் பயிர்களை மனிதனுடைய உணவாகும்படி கட்டளையிட்டார் (1:29, 30). தாம் படைத்த அனைத்தும் "மிகநன்று" (1:31) என்ற தேவனின் மதிப்பீட்டோடு இந்தப் பகுதியும் முதல் அதிகாரமும் நிறைவடைகிறது.

## நாட்டு மிருகங்கள் சிருஷ்டிக்கப்படுதல் (1:24, 25)

**[24]பின்பு தேவன்: பூமியானது ஜாதிஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. [25]தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.**

**வசனங்கள் 24, 25**. இந்த இரண்டு வசனங்களில் ஆசிரியர், தேவன் படைத்த மூன்று வகையான மிருகங்களை (**ஜீவன்களை**) விவரித்தார். (1) **புல்பூண்டுகளை** உணவாகக் கொள்ளும் பெரிய வீட்டுப் பிராணிகளும் கால்நடைகளும். (2) **ஊரும் பிராணிகளான** பூச்சிகள், பாம்புகள், பல்லிகள், மற்றும் சிறிய நான்கு கால் உயிரினங்கள் (3) **பூமியின் விலங்குகள் வெளிப்படையாக** இது எல்லா வகையான காட்டு விலங்குகளைக் குறிக்கிறது. அதனதன் ஜாதியின்படியே அவைகள் அனைத்தையும் தேவன் படைத்தார். அவர் தாவரங்கள், மரங்கள், கடல் வாழ் உயிரினங்கள், மற்றும் பறவைகளை ஏற்பாடு செய்தது போலவே அவர் இப்போது நிலவிலங்குகள் அனைத்தையுமே தேவன் உண்டுபண்ணினார். எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் எல்லைகளையும் வரையறைகளையும் சிருஷ்டிகர் வைத்தார். பின்னர் தமது படைப்பின் வேளையில், தாம் படைத்த ஒவ்வொரு வகையான தாவர விலங்கு உயிரினங்களும் சுய இனபெருக்கம் ஆற்றலைக் கொடுத்தார். தாம் படைத்த எல்லாவற்றையும் **பார்த்து தேவன் அது நல்லது என்று கண்டார்**.

## தேவ சாயலாக மனிதன் சிருஷ்டிக்கப்படுதல் (1:26-28)

**[26]பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். [27]தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். [28]பின்பு தேவன் அவர்களை**

**நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.**

**வசனம் 26. மனுஷனைப்** படைத்ததின் மூலம் துவக்கம் வரலாற்றின் உச்சத்தை அடைந்தது, ஏனென்றால் தேவன் அவனை தன் **சாயலாகவும்** (צֶלֶם, *tselem*) **ரூபமாகவும்** (דְּמוּת, *d^emuth*) படைத்தார். மனிதன் சரீரப் பிரகாரமாக தேவனைப் போன்றவன் அல்ல, ஆனால் அவரது படைப்புகளின் மத்தியில் மனிதர்கள் மாத்திரமே அவரது ஆவிக்குரிய, அறிவு சார்ந்த மற்றும் நல்லொழுக்க குணங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

**தேவன்** என்பதன் எபிரெய வார்த்தை (אֱלֹהִים, *'Elohim*) ஒரு பன்மைச் சொல் ஆகும். ஆதியாகமத்தின் ஆசிரியர் புறமத நம்பிக்கைகளில் உள்ள பல கடவுள் என்ற கருத்தில் நம்பிக்கை இல்லாதவராக இருந்தாலும், **உண்டாக்குவோமாக** என்ற பன்மை வினைச்சொல்லை பயன்படுத்தியுள்ளார். நிச்சயமாக அவர் அந்த வினைச்சொல்லை "தேவன்" என்ற பன்மை எழுவாய்க்கு ஒத்ததாகத்தான் பயன்படுத்தியுள்ளார். இருந்தாலும் இதற்கான காரணம் வெகுவாக விவாதிக்கப்படுகிறது, ஏனென்றால், ஆதியாகமத்தின் வேறு பகுதிகளில் ஒருமை வினைச்சொற்கள் *'Elohim* "எலோகிம்" என்ற பன்மைப் பெயர்ச்சொல்லோடு பயன்படுத்தப்பட்டுள்ளன.[13]

எழுத்தாளர் 1:26ல் பன்மைத்துவத்தைப் பயன்படுத்துகிறார் என்பதற்கான பிரபலமான கருத்து என்னவென்றால் தேவனுடைய மாட்சிமையின் நிறைவாகிய குணாதிசயங்களையும், வல்லமைகளையும் தேவத்துவத்திற்குள் இணைந்திருப்பதாக பண்டையகால மக்கள் கருதினார்கள். ஆயினும், மேற்கூறிய பகுதியின் சாத்தியக்கூறுகளுக்கு அப்பாற்பட்டு, சர்வ வல்லவர் ஒரு உத்தரவை வெளியிடும்போது அதில் பன்மைத்துவம் பயன்படுத்தப்பட்டதாக வேதாகமத்தில் எங்கும் தெரியவில்லை.[14] மேலும், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான விசேஷ உறவு இருப்பது இந்த பகுதியின் மையமாக இருக்கிறபடியால், இங்கு தேவனுக்குச் சேர வேண்டிய இராஜமரியாதையை குறைவாக மதிப்பிட பன்மைத்துவம் பிரயோகப்படுத்தப்பட்டது என்பது நம்பத்தகுந்ததாக இல்லை. தேவனின் மாட்சிமையின் குணாதிசயத்தின்படி அல்லாமல், சிருஷ்டிகரின் சாயலில் சிருஷ்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை முக்கியத்துவப்படுத்துவதே நோக்கம்.

முற்போக்கு பார்வைக்கு கூடுதலாக, மேற்கூறிய கருத்தைத் தவிர, தேவனை தன்மைப் பன்மையில் (நாம் மற்றும் நமது என்று) கூறியிருப்பதை திரித்துவ கோட்பாட்டுக்கு பழைய ஏற்பாட்டில் உள்ள ஆதாரமாக மற்றவர்கள் குறிப்பிடுகிறார்கள். எனினும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவர்கள் ஆதியாகமம் 1:26 ம் வசனம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற பன்முகத்தன்மையை மறைமுகமாக

குறிப்பதாகக் கருதவில்லை. நிச்சயமாக புதிய ஏற்பாட்டில் இந்தக் கோட்பாட்டிற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.[15] இருப்பினும், எந்தவொரு ஏவப்பட்ட ஆசிரியரும் படைப்பின் வரலாற்றில் "நாம்" மற்றும் "நமது" என்ற பன்மைச் சொற்கள் திரித்துவ தேவன் என்ற கருத்தை பரிந்துரைப்பதாக குறிப்பிடவில்லை. எனவே இவ்வாறு அர்த்தங்கொள்ள தகுந்த வேத ஆதாரங்கள் இல்லாமல் இருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட உரிமை கோர நாம் தயங்க வேண்டும்.

1:26 ன் இறுதியான, தீவிரமாக கருதவேண்டிய புரிந்து கொள்ளுதல் என்னவென்றால், பழைய ஏற்பாட்டிலேயே பல இடங்களில் தேவன் தம் சிங்காசனத்தில் தேவதூதர்கள் சூழ்ந்திருக்க மத்தியில் வீற்றிருக்கும் ஒரு பேரரசனாக குறிப்பிடப்படுகிறார். மிகாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகள் இவ்வாறு கூறுகிறது: "கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலது பக்கத்திலும் அவர் இடது பக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்." அப்பொழுது கர்த்தர் "ஆகாப் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு, அவனுக்குப் போதனை செய்கிறவன் யார்" என்று கேட்டார் (1 இராஜா. 22:19, 20). உடனே ஒரு தூதன் இஸ்ரவேலின் வடக்கு இராஜ்ஜிய பொல்லாத ராஜாவான ஆகாப் மீது தீர்ப்பளிக்கும்படி முன் வருகிறான். சங்கீதம் 89:5-7 ல் வேறொரு பகுதியில் தேவனை வானதூத சேனை சூழ இருக்கும் சர்வ வல்ல ராஜாவாக சித்தரிக்கிறது. இந்த சங்கீதக்காரன் வானங்களிலுள்ள "பரிசுத்தவான்களின் சபை" தேவனை துதித்துப் போற்றுவதாகவும், மேலும் அவர் "பலவான்களின்புத்திரரில்" ("heavenly beings"; NIV; NRSV) கர்த்தருக்கு ஒப்பானவர் யாருமிலர் ஏனென்றால் "தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர்" என்று அறிவிக்கிறார்.

இறுதியாக, ஏசாயா 6:1-8 தேவன் ஒரு மகா இராஜா என்று தெளிவாக விவரிக்கிறது, "உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டேன்; அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது" சேராபீன்களின் (தூதர்கள்) சேனைகளால் அவர் சூழப்பட்டு புகழப்படுகிறார், அவர்கள் அவரைப் துதிப்பதும் மற்றும் அவருடைய சித்தம் செய்ய எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார்கள் (ஏசாயா 6:1-3, 6, 7). தேவனுடைய வார்த்தையைக் கேட்ட ஏசாயாவின் தொகுப்பில், சொல்லப்படுகிறது "நமக்காக யார் போவார்?" (ஏசாயா 6:8), அந்த தரிசனத்தில் தானே கர்த்தருடைய கேள்வியில் "நமக்காக" என்று பன்மையில் கூறுவது பரலோகத்தில் தூதர்களின் கூட்டத்தை அடக்கமாயிருக்கிறது.

முந்தைய வசனப் பகுதியின் வெளிச்சத்தில், ஆதியாகமம் 1:26 குறிப்பாக அது திருத்துவத்தை சுட்டிகாட்டுகிறது, என்று புரிந்து கொள்வதற்குப்பதிலாக, அவருடைய பரலோக சேனையோடு

தேவனுடைய செயல்பாடு இசைந்திருப்பதை இது தெளிவுப்படுத்துவதாக தெரிகிறது. ஆகவே தேவதூதர்கள், படைப்பிலே ஈடுபட்டிருந்தனர் - சக சிருஷ்டிகராக அல்லாமல், தேவனுடைய செயல்களுக்கெல்லாம் சாட்சியாகவும் மற்றும் அதற்காக துதித்துக் கொண்டும் இருந்தனர். அவர் தமது கவிதைக்கேள்வியில் யோபுவை கேட்கும் போது தேவன் குறிப்பிடுகிறார், “நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிற போது நீ எங்கேயிருந்தாய்? … அல்லது அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே” (யோபு 38:4-7).[16]

**வசனம் 27.** வசனம் 26 தேவனின் வார்த்தைகளின் மேற்கோளாக இருக்க, வசனம் 27 ஆசிரியரின் உரையாக இருக்கிறது. அவர் தமது கருத்தை வலியுறுத்த ABBA மாதிரியைப் பயன்படுத்தியிருக்கிறார்:

A1: **தேவன் … மனுஷனை சிருஷ்டித்தார்.**
B1: **தம்முடையசாயலாக,**
B2: **தேவசாயலாகவே**
A2: **அவர் அவனை சிருஷ்டித்தார்.**

தேவன் சிருஷ்டித்த மனித உருவத்தில் தேவனுடைய “ரூபமும்” (*tselem*) “செலெம்” மற்றும் “சாயலும்” (*d$^e$muth*; 1:26) “திமுத்” காணப்படுவது எவ்வாறு? அதன் கருத்து பல கோணங்களில் புரிந்துகொள்ளப்படுகிறது.

முதல் பதம் (*tselem*) “செலெம்” என்பது விக்கிரகத்தைக் குறிக்கிறது. தேவனுடைய கட்டளைகளில் இந்த வகை சிலைகள் கடுமையாக தடை செய்யப்பட்டிருந்தன[17] (எண். 33:51, 52). ஆயினும், பழைய ஏற்பாட்டு பெரும்பாலான சம்பவங்கள் முழுவதும், தேவனுடைய ஜனங்கள் தங்கள் தவறான கடவுள்களை விட்டுவிட மறுத்துவிட்டனர். ஆகவே தான் தமது விக்கிரக ஆராதனை ஜனங்களை அவர்களுடைய விக்கிரகத்தோடு அவர்களையும் அழித்துவிட தேவன் கட்டளையிட்டு அனுமதித்தது மூலம் எருசலேமிற்கும் யூதேயாவிற்கும் ஒரு முடிவைக் கொண்டுவந்தார் (எசே. 7:3, 20, 24-27).

ஆதியாகமம் 5:3-ல் “ரூபமும்” (*tselem*) “செலெம்” என்பது வேறொரு வகையில் சரீர ஒற்றுமையின் அடிப்படையில் பயன்படுத்தப் பட்டுள்ளது, அதோடு 1:26-ல் காணப்படும் “சாயலும்” (*d$^e$muth*; 1:26) “திமுத்” சேர்க்கப்பட்டுள்ளது. ஆதாமின் சந்ததிகளைப் பற்றி எழுத்தாளர் கலந்தாலோசிக்கையில் அவர் சொல்கிறார், “ஆதாம் நூற்று முப்பது வருடம் வாழ்ந்த போது தன் சொந்த சாயல் [*d$^e$muth*] ‘திமுத்’, மேலும் தன் சொந்த [*tselem*] ‘செலெம்’ ரூபத்தின்படியும் உள்ள தன் மகனுக்கு தகப்பனாயிருந்தார், அவனுக்கு சேத் என்றும் பெயரிட்டார்” (5:3). இந்தக் கூற்றின் மிக முக்கியமான இயற்கை அர்த்தம் என்னவென்றால்,

அப்பா மகனுக்கும் சரீரத் தோற்றத்தில் தெளிவான ஒற்றுமை இருந்தது. மகன் அப்பாவைப் போன்று இருக்கிறான் என்ற கருத்தை பகிரும்படிக்கு “ரூபமும்” (*tselem*) “செலெம்” மற்றும் “சாயலும்” (*d*[e]*muth*) “திமுத்” என்ற இரண்டு பதங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மற்றொரு பகுதியில், “ரூபமும்” (*tselem*) “செலெம்” என்பதற்கு உறுதியான அர்த்தம் இல்லை, ஆனால் இயற்கையான ஆவிக்குரியதையே குறிக்கிறது. ஒரு சங்கீதக்காரன் குறுகிய வாழ்நாள் குறித்து கருத்துக் கூறும்போது, தேவனுடைய பார்வையில் தனது வாழ்க்கை ஒன்று மில்லாமையாயிருக்கிறது என்று புலம்புகிறார்.

> எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம் [הֶבֶל, *hebel*].
> (சேலா)
> வேஷமாகவே மனுஷன் திரிகிறான் [*tselem*],
> விருதாவாகவே சஞ்சலப்படுகிறான் [*hebel*],
> ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான்
> என்று அறியான் (சங். 39:5, 6).

செலெம் (*tselem*) என்பது கற்பனைத் தோற்றம் என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ளது, இணையாக ஹெபேல் (*hebel*) என்பது மூச்சு மற்றும் ஒன்றுமில்லை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இந்த இரண்டும் எபிரெய வார்த்தைகளும் சரீரமல்லாததைக் குறிக்கிறது.

அதேபோன்று, சங்கீதம் 73:20-ல் நித்திரை “தெளிந்தவுடனே சொப்பனம் [חֲלוֹם, *ch*[a]*lom*] ஒழிவது,” மேலும் தேவன் “அவர்கள் வேஷத்தை இகழுவீர் [*tselem*]” என்று சொல்வதாக சங்கீதக்காரன் துன்மார்க்கனுடன் தொடர்புபடுத்துகிறான். இங்கே “சொப்பனம்” (*ch*[a]*lom*) இணையாக “வேஷம”; (*tselem*) ஆகியவை “கற்பனைத் தோற்றம்” (NRSV), “விநோதம்” (NIV), என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது சுட்டிக்காட்டுவது என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட பின்னனியில், செலெம் என்பது பொருள் தன்மையற்ற அல்லது உடல் சார்பில்லாத ஆகியவைகளைக் குறிக்க வேண்டும், இவை எந்தவித ஆதார பொருளுமில்லாமலும் மற்றும் இயற்கையாகவே ஆவிக்குரியதாகவும் இருக்க வேண்டும்.

தேவனுடைய ரூபமானது மனிதனிலிருக்கிறது என்பதை விவரிக்க பயன்படுத்தப்பட்டிருக்கும் இன்னொரு பதம் “சாயல்” (*d*[e]*muth*; 1:26). இது சரீர ஒற்றுமையின் கருத்தையும் கொண்டு செல்கிறது, அது ஏசாயா 40:18, 19-ல் ஒரு கேள்வியில் காணப்படுகிறது, மேலே வானத்திலும், கீழே பூமியிலும் தேவனோடு ஒப்பிடுவதற்கு ஒன்றுமில்லை என்பதை தேவன் அங்கே உறுதிப்படுத்துகிறார். இந்தப் பகுதியில் வினைச்சொல்லும் (דָּמָה, *damah*), மற்றும் பெயர்சொற்களுக்கு (*d*[e]*muth*) என்ற ஒரே மூலவார்த்தையிலிருந்து அவைகளுக்கு ஏற்ப தோன்றியுள்ளது:

தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள் [*damah*]?
எந்தச் சாயலை [*d*$^{e}$*muth*] அவருக்கு ஒப்பிடுவீர்கள்?
கன்னான் ஒரு சொரூபத்தை வார்க்கிறான்,
தட்டான் பொன்தகட்டால் அதை மூடி,
அதற்கு வெள்ளிச் சங்கிலிகளைப் பொருத்தி வைக்கிறான்.

வேறு வார்த்தையில் கூறுவதென்றால், மனிதனால் அலங்கரிக்கப் பட்ட எந்த ஒரு ரூபமும் மற்றும் சாயலும் தேவனுடைய மெய்யான இயல்புகளை ஒருபோதும் வெளிப்படுத்த முடியாது.

பத்துக்கட்டளைகளில், தேவனுடைய ரூபம் அல்லது சாயலில் மேலே வானத்திலும், கீழே பூமியிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பாக செய்யப்படுகிற அல்லது முயற்சிக்கிற சொரூபங்களை உருவாக்க இஸ்ரவேலருக்கு தடை செய்யப்பட்டுள்ளது (யாத். 20:3-5; உபா. 5:7-9). இஸ்ரவேலர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கு முன்பு, இதைக் குறித்து மோசே எச்சரிக்கிறார்: “கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை” (உபா. 4:15). மனிதர்களின் சாயல் (ஆண், பெண்), விலங்குகளின் (மிருகங்கள், ஊர்வன, பறவைகள், மீன்கள்), வானத்தின் சேனைகளின் சாயலுக்கு (சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்) ஒப்பான “எந்த ஒரு சொரூபத்தையும்” அவர்கள் செய்யக் கூடதிருந்தது (உபா. 4:16-19).

இருந்தாலும், தேவன் கரங்களுடன் (சங். 10:12, 14), கால்களுடன் (ஏசாயா 60:13), முகம், கண்கள், மற்றும் காதுகள் உடன் (சங். 34:15, 16) இராஜாவாக சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதாக (ஏசாயா 6:1), அடிக்கடி தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூற்றுக்கள், மனிதனுடைய சரீரம் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டுள்ளதாக அர்த்தம் கொள்ளும் விதமாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது; ஆனால் அவைகள் தேவனுடைய உருவகமாக விவரிக்கப்பட்டுள்ளன, அப்படியே நேரடி அர்த்தம் கொள்ளக்கூடாது. அப்படிப்பட்ட மொழியாக்கமானது சரீரமல்லாத ஆவியான தேவனுடைய இயல்பை அடிப்படையிலே தவறாக புரிந்துகொள்ள ஏதுவாகும் (யோவான் 4:24; பார்க்கவும் லூக். 24:39). ஆகவே தான் ஒரு சங்கீதக்காரன் இவ்வாறாக எழுதுகிறான், “உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர்” (சங். 139:7, 8).

தேவனுடைய ஆவிக்குரிய இயல்பு மனிதனின் சரீர இயல்புக்கு எதிர்மறையாக இருக்கிறது. “தேவன் தம்முடைய சாயலாக மனிதனைச் சிருஷ்டித்தார்” என்பது தேவனுடைய ஆவிக்குரிய இயல்பைக் குறிக்கிறது, அதே வேளையில், **ஆணும் பெண்ணுமாக அவர்களைச்** சிருஷ்டித்தார். என்பது மனிதனுடைய இயல்பைக் குறிக்கிறது. இந்த

பகுதியில் உள்ள “மனிதன்” என்பதற்கு (אָדָם, *’adam*) என்று கூறப்பட்டுள்ளது, “மனுக்குலம்” என்பது எபிரெய மொழியில் இனத்தின் பெயராக பயன்படுத்தப்பட்டுள்ளது பின்னர் தனிப்பட்ட பெயரானது “ஆதாம்” (2:20; 3:17, 21). இருப்பினும், இங்கேயும் அதேவேளையில் ஆதியாகமம் 5:1, 2 லும் “ஆதாம்” என்பதன் அசல் பொருள் ஆணும் பெண்ணும் சேர்ந்ததே ஆகும், ஏனெனில் இருவரும் தேவனுடைய சாயலிலும் ரூபத்திலும் படைக்கப்பட்டிருந்தனர். உடல் ரீதியாகவும், மனுஷனும் மனுஷியும் பாலின ரீதியாகவும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கிறபடியால், தேவனுடைய சாயல் என்பது ஆண், பெண் (*’adam,* “மனுக்குலம்”) என்ற உடல் ரீதியான இயல்பிலிருந்து, அல்லது வடிவிலிருந்து வேறுபட்ட ஒன்றைக்குறிக்க வேண்டும். ஒருமாற்றாக, ஒழுக்க ரீதியான உணர்வு, ஆவிக்குரிய வாழ்வு, மற்றும் அறிவுப்பூர்வமான பண்புகளுடன் மனிதன் மட்டுமே தன் சிருஷ்டிகரிடம் பகிர்ந்து கொள்ளுகிறான், இது அவர் சிருஷ்டித்த மற்ற உயிரினங்களைவிட மாறுபட்டது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

**வசனம் 28. தேவன்** தமது சொந்த சாயலில் ஆணையும், பெண்ணையும் படைத்த போது **அவர்களை ஆசீர்வதித்து, பலுகிப்பெருகி**, **பூமியை நிரப்**பும்படி கூறினார். இந்தச் செயலில், அவர் மனுக்குலத்தின் மேல் ஆசீர்வாதத்தை சொன்னது மட்டுமல்லாது, 1:22-ல் பறவைகளுக்கும், கடல் வாழினத்துக்கும் அவர் செய்ததுபோல், பலுகிப்பெருகு, பூமியை நிரப்பு, அவர்களுக்கு தேவையான உள் ஆற்றலைக் கொடுத்து நிறைவேற்றினார். பிறப்பித்தலில் சம்பந்தப்பட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் கொடுக்கப்பட்ட பாலின தொடர்பு ஆசீர்வாதமானது படைப்பின் அங்கம் ஆகும், இயற்கையின் விபத்துமல்ல, அல்லது உயிரினங்களின் விந்தையுமல்ல. ஏதேன் தோட்டத்தில் பாவத்திற்குள் இது நடத்தவுமில்லை, பாவத்திற்கான தண்டனையாகவும் வரவில்லை.

தேவன் மனுக்குலத்தில் உருவாக்கிய பாலின உந்துதல் என்பது ஆவிக்குரியதல்லாததென்றோ, அசுத்தமானதென்றோ, தீமையான தென்றோ, கருதினால், வேத போதனைக்கு எதிரானது.தாம் படைத்தவற்றை அவர் திட்டமிடுகையில், “மிகவும் நல்லது” (1:31) என்று தேவன் அறிவித்த, அவருடைய படைப்பில் இதுவும் ஒரு அங்கம் ஆகும், அவர் எல்லாமும் அவர் படைத்து முடித்த பிறகு என்று கூறியதாகும். பாவம் என்பது பாலுறவு அன்று, ஆனால் தகாத பாலுறவும், இது திருமண உறவில்கூட பொருந்தக்கூடியதும், ஒருவர் இன்னொருவரை தன் சுயநலமான விருப்பிற்கிணங்க பாலுறவில் பயன்படுத்துவதும் ஒரு இச்சையான பாவமாகும். அதே வேளையில், பாலுறவும் அதன் அடையாளமும், செயல்பாடும் தேவனுடைய இயல்போ, அல்லது செயல்பாடோ அல்ல, படைப்பின் செயல்பாடானது, தேவனுடைய

ரூபத்தில் படைக்கப்பட்டவர்களாகிய ஆண், பெண்ணிற்கான தேவனுடைய சித்தத்தின் அங்கமுமானதும், நேர்மறையில் வைக்கப்பட்டதுமான, திருமணம் என்பது தெய்வீக நோக்கம் ஆகும்.

"பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" என்ற தேவனுடைய கட்டளை என்பது பழங்கால கள்ளக் கருவுருவாவதற்கு, உறுதியான எதிர்மறையாக நிற்கிறது. பறவைகளுக்கும், மிருகங்களுக்கும், மனுக்குலத்திற்கும் கருவுருவாகும்படிக்கு தெய்வங்கள் பாலுறவை ஊக்குவிப்பதுமே, இந்த சீரழிந்த சடங்காச்சாரங்களும், தரம் தாழ்ந்த செயலான விபச்சாரமும். தேவனுடைய பொறுப்பும், ஆசீர்வாதமும், இந்தக் கள்ளத்தனங்களின் பங்களிப்பை அவசியமற்றதாக்குகிறது, ஆனால் இது போன்ற தரம் தாழ்ந்த பழக்கவழக்கங்களோ, அவிசுவாசத்தின் அடையாளத்தின் உச்சமும், ஒன்றான மெய் தேவனிலிருந்து விலகி பாவத்திற்குள் செல்வதும், உயிர்கொடுப்பவரை அவமதிக்கும் விபச்சாரமும் மனிதனுக்குள்ள தேவனுடைய ரூபத்தை களங்கப்படுத்தும். இப்படிப்பட்ட தரக்குறைவாக செயல்பாடுகளுக்கு நேர்மாறாக, ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் இடையேயான திருமணம் என்பது ஆதியிலிருந்தே மனக்குலத்திற்கான தேவனுடைய பரிசாகும்; மேலும் அது அவர்கள் மேலும் மற்றும் அவர்களின் சந்ததி மேலும் தேவன் அருளும் விசேஷித்த ஆசீர்வாதமாக வந்தது.

ஆசீர்வாதத்தின் தத்துவத்தை இலேசாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இது ஆதியாகமத்தின் முக்கியமான மையக்கருத்துக்களுள் ஒன்றாகும். முதன்மையாக, ஆசீர்வாதம் சந்ததியாருடன், கனிகொடுக்கும் தன்மையுடன் பூமியை நிரப்புவதுமேயாகும்; ஆனால் ஏற்கனவே மனிதனின் விதை ஆசீவாதத்தால் கட்டப்பட்டு இருந்த இந்த மையக்கருத்து மீதி ஆதியாகம புத்தகம் முழுவதும் ஆளுகை செய்து வருகிறது. ஏராளமான தனிநபர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர் - அது அவர்களுக்கானது மட்மல்ல, மாறாக முழு உலகுக்கும் தேவனுடையதல்ல.

கூடுதலாக, பிறப்பித்தலில் மூலம் பூமியை நிரப்புவதற்கு, ஆணுக்கும், பெண்ணுக்குமான தேவனுடைய இரண்டாவது கட்டளை ... அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் [கீழ்படுத்தி] ஆளக்கடவர்கள் என்பதாகும் (காண்க 1:26). முதலாவது பதமான "கீழ்ப்படுத்தி" என்பது כָּבַשׁ (*kabash*) அது பூமியைக் குறிக்கும், மற்றும் ஆளுகையை செயல்படுத்த கட்டாயப்படுத்துதலும் எதிர்ப்பும் சம்பந்தப்பட்டிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.[18]

*Kabash* என்பது வேதாகம பகுதிகளில் இவ்விதமாக ஏராளமான இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சான்றாக, அகஸ்வேரு ராஜா, தன் மனைவியாகிய இராஜாத்தி எஸ்தரிடம் ஆமான் தவறாக நடக்க

முயற்சித்தியிருப்பானோ என்று எண்ணினான் (எஸ்தர் 7:8). கானானிய பட்டணங்களை ஆக்கிரமித்த இராணுவ வெற்றிக்கும் அதே வார்த்தை தான் பயன்படுத்தப்பட்டுள்ளது (எண். 32:22; யோசுவா 18:1). கூடுதலாக, அது யூதர்கள் அடிமைத்தனத்திற்குள்ளாகும்படிச் செய்யப்பட்டதையும் விவரிக்கிறது (2 நாளா. 28:10; நெதே. 5:5; எரே. 34:11).

மனித உறவுகளில் *kabash* என்ற வினைச்சொல் அடிக்கடி பலவந்தப்படுத்துதல் சம்பந்தப்பட்டிருந்தாலும், ஆதியாகமம் 1ன் சந்தர்ப்பப் பொருளில் மக்களை கீழ்ப்படுத்துவதில் ஈடுபடவில்லை. ஆனால் நிலத்தை கீழ்ப்படுத்துகிறது. ஆதியாகமம் 1:28ல் சம்பந்தப்படுத்துதல் என்பது மனிதனின் விருப்பத்திற்கு நிலம் எளிதாக கீழ்ப்படிவதில்லை, என்பதாகக் காணப்படுகிறது; அவன் தன் வலிமையால் சிருஷ்டிப்பை கீழ்ப்படுத்திக் கொண்டு வர வேண்டியதாய் இருக்கும். விக்டர் பி.ஹேமில்டன், 2:5, 15 - லுள்ள பண்படுத்துவதற்கும், காப்பதற்கும் இணையைக் "குடியமர்த்தலும் வேளாண்மையும்," குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்று கருதினார்.[19]

"பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்" என்பது மனுக்குலத்துக்கான தேவனுடைய புத்திமதியின் அடுத்த பகுதியாகும். ஆதியாகமம் 1:28 ல் உள்ள பதமானது இந்த எல்லா ஜீவராசிகள் மேலும் ஆளுகை செய்வது רָדָה (*radah*) ராடாவைக் குறிக்கிறது, அது பொதுவாக "தெய்வீக ஆளுகைவிட மனித ஆளுகைக்குப்" பயன்படுத்தப்பட்டுள்ளது.[20] இது குறித்த ஒரு உதாரணத்தை சங்கீதம் 110:2 ல் காணலாம், எதிரிகளின் மத்தியில் ஆளுகை செய்யும்படி (*radah*) சீயோனின் இராஜாவுக்கு அங்கே கர்த்தர் புத்திமதியளிக்கிறார். இஸ்ரவேல் தன் எதிரிகளின் அடிமைகள் மேல் ஆளுகை செய்வதற்கும் (ஏசாயா 14:2) மற்றும் புறஜாதி தேசங்கள் மற்ற ஜனங்களை கீழ்ப்படுத்தி கடுமையான ஆளுகை செய்வதற்கும் (ஏசாயா 14:6) இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

*Radah* என்பது ஜனங்கள் மீது ஆளுகையிலும், அதிகாரத்திலும் இடைபடுவதைக் குறிக்கும் இராஜரிகப் பதம் ஆகும்; ஆயினும், தேவ ஜனங்கள் அப்படிப்பட்ட கடுமையான அதிகாரத்தை செயல்படுத்தக்கூடாது. லேவியராகமம் 25:43-ல், எஜமான் தனது வேலைக்காரர்கள் மேல் கொடூரமாய் ஆளுகை செய்ய (*radah*) கடுமையாக தடைபண்ணப்பட்டுள்ளார். சாலொமோன், அவனுடைய முற்பகுதி ராஜ்யபாரத்தில், சகல ராஜாக்களையும் (*radah*) ஆண்டு வந்தான், அவனைச் சுற்றி எங்கும் சமாதானமாயிருந்தது (1 இராஜா. 4:24). சங்கீதக்காரன், அரசாளும் இராஜாவுக்கு அவரது ஆளுகையில் மக்களுக்கு நியாயத்தீர்ப்பும், நீதியையும் கொடுக்கவும், எளியவனையும்

சிறுமையானவனையும் விடுவிக்கவும், உதவியற்ற எளியவனுக்கு இரங்கவும், வஞ்சகத்திற்கும், கொடுமைக்கும் தப்புவிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறார் (சங். 72:1-3, 7, 8, 12-14).

ஆதியிலே தேவன் இந்த வகையான மனுக்குலத்திற்கு ஆளுகையைக் (*radah*) கொடுத்தார் என்பது பிரத்தியட்க்ஷமாயிருக்கிறது. இது மனிதன் இயற்கை ஆதாரங்களை பயன்படுத்திக் கொள்ளுவதை நியாயமானதாக்கவும், ஆனால் தேவனுடைய அழகான உலகை நெறியற்றுப் பயன்படுத்துதலுக்கு இது எந்த ஒரு அங்கீகாரமும் கொடுக்கவில்லை. மனிதன் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இயற்கை மற்றும் விலங்குகளின் இராஜ்ஜியத்தின் மேல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, அவன் தேவனுக்குக் கீழ் இருக்கிறான் மற்றும் அவைகளை கடுமையாகவோ, சுயநலத்திற்காகவோ நடத்துவதைவிட, மாறாக, நலன்களுக்காக அவன் தேவனுடைய ஆளுகையை மட்டுமே செயல்படுத்த வேண்டும். பூமியையும் அதிலுள்ள படைப்புகளையும் அவன் ஆளுகையில், தேவனுடைய குணாதிசயத்தை (ரூபத்தை) பயனளிக்கும் விதமாக வெளிப்படுத்த வேண்டும். தேவன் மனிதனுக்குக் கொடுத்த பொறுப்பு என்னவென்றால், பூமி மற்றும் விலங்குகள்மேல் எஜமானனாக இருக்க வேண்டும், ஆனால் ஒரு உண்மையுள்ள உக்கிராணக்காரன் தன் எஜமானுடைய சொத்துக்களை கவனிக்கின்றவன் போன்று, அவன் பொறுப்போடும், மற்றும் பொறுமையோடும் அவைகளை ஆளுகை செய்ய வேண்டும்.

## தேவன் மனுக்குலத்துக்கும் மிருகங்களுக்கும் ஆகாரம் கொடுத்தல் (1:29, 30)

**29பின்னும் தேவன்: இதோ, பூமியின்மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதை தரும் கனி மரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது; 30பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார்; அது அப்படியே ஆயிற்று.**

**வசனங்கள் 29, 30.** ஆதியாகமத்தின் ஆசிரியர் படைப்பின் கணக்கைத் தொடர்கிறார், தேவன், **கனிமரங்களாகிய சகல வித விருட்சங்களையும்** அவர்கள் நன்மைக்காக படைத்ததின் மூலம் எல்லா உயிரினங்களுக்கும் அவர் **உணவளித்தார்**. இந்தக் கூற்று, மனிதன் பாரம்பரிய மொசெபொத்தோ “கடவுள்களுக்குச் சேவை செய்ய,”[21] அதாவது அவர்களுக்கு உணவு அளிக்கப் படைக்கப்பட்டவன் என்ற கண்ணோட்டத்தியிலிருந்து முற்றிலும் எதிராக இருக்கிறது. கில்கமேஷ்

புராணத்தில், இது கடவுள்கள் மனுக்குலத்தை அழிக்க வெள்ளத்தை அனுப்பிய பிறகு, அவர்களுக்கு உணவு அளிக்க யாருமில்லை என்பதால் தெளிவாக இருக்கிறது. உத்னாபிஷ்டிம் (பாபிலோனியன், நோவாவுக்கு சமமானவன்) படகிலிருந்து வெளியே வந்து, ஒரு பலி செலுத்தினபோது, அந்த கடவுள்கள் மிகவும் பசியாயிருந்ததினால் "ஈக்களைப் போல் சுற்றிக்கொண்டனர்"[22] என்று சொல்லப்பட்டிருந்தது. ஒவ்வொரு தாவரங்களுக்கும்.

மனிதர்களுக்கும் மற்றும் விலங்குகளுக்கும் உணவாக தேவன் கொடுத்தார் என்பது **எல்லா தாவரங்களும் எல்லாராலும் உண்ணக்கூடியவை** என்பதற்கும் மேலாக, எல்லா உயிரினங்களும் தாவரங்களையே உணவாகக் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை. அது ஒரு பொது விதிக்குள் அமைத்தலாகும், அதாவது எல்லா உயிரினங்களும் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தாவரங்களை சார்ந்திருக்கின்றன, எல்லாரும் தேவனுடைய கரத்தினால் உணவளிக்கப் படுகிறார்கள் என்று அந்த வசனம் காண்பிக்கிறதாயிருக்கிறது.[23] பிரளயத்திற்குப் பின்புவரை மாமிசம் உண்பது விசேஷ அதிகாரம் அளிக்கவில்லை என்பது உண்மை தான் (9:2-4). ஆயினும், அந்தக் காலகட்டத்திற்கு முன்புவரை மாமிசம் சாப்பிடுவதை தேவன் தடை செய்யவில்லை. ஆதாமும் தோட்டத்தில் ஏவாளும் பாவம் செய்த பின்பு தேவன் தோலினால் ஆடையைச் செய்தார் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும் (3:21). இயற்கையாகவே அந்த சம்பவத்திலிருந்து ஒரு கேள்வி எழும்புகிறது: "முதல் தம்பதியருக்கு விலங்கில் (களில்) இருந்து மாமிசத்தை சாப்பிடும்படிக்குத் தேவன் கொடுத்தாரா?" அந்தக் கேள்விக்கு பதிலளிக்கப்படாமல் இருக்கிறதெயென்றாலும்கூட, ஆனால் சாத்தியக் கூறுகளை அந்தப்பகுதி அனுமதிக்கிறது.

உண்மையிலே, மனுக்குலத்தின் துவக்கத்தில், தேவனுடைய அனுமதியுடன் அவருக்கு பலிகள் செலுத்தப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது (4:4). மீண்டுமாக, கர்த்தருக்காக பலிபீடத்தில் செலுத்தப்பட்ட பலியின் ஒரு பகுதியை ஆராதிப்பவனும்கூட புசிக்கிறான் என்பது சம்பந்தப் படுத்துதலாயிருக்கிறதா, அதுவே பின்பு மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் வழக்கப்படுத்தப்பட்டுள்ளதா? பிரளயத்திற்கு முன்பே கூட, பேழைக்குள் கொண்டு வரப்பட்ட வேண்டிய "சுத்தமான" மற்றும் "அசுத்தமான" விலங்குகளின் இடையே எண்ணிக்கையில் வேறுபாட்டை ஏற்படுத்தும்படிக்கு நோவாவுக்கு தேவன் அறிவுறுத்தினார் (7:2). பின்பு மோசேயின் முறைமையின் கீழ் இருந்ததுபோல மனிதர்கள் சாப்பிடுவதற்கும், தேவனுக்கு பலி செலுத்துவதற்கும் சுத்தமான விலங்குகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும், என்பது பிரளயத்திற்கு முன்பே இருந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதா? எந்தவித தெளிவான ஆவிக்குரிய கூற்றும்

இல்லாத பட்சத்தில், இம்மாதிரியான கேள்விகளுக்குப் பதில் கொடுக்க முடியாது. அனுமானத்தின் கூறுகள் இருக்கின்றன ஆனால் இந்தப் பகுதி பரிந்துரைப்பது என்னவென்றால், உலகத்திற்குள் பாவம் பின்பு வந்த மேல், பலிகளின் விலங்கை கொல்லுதல், பலியிடுதல், பலியிட்டவைகளைச் சாப்பிடுதல் குறித்து தேவன் அவருடைய ஜனங்களுக்கு அறிவுறுத்தினதாகக் காணப்படுகிறது. இந்தக் காரியங்கள் குறித்து வசனங்களில் உறுதியான தகவல்கள் பிரளயத்திற்கு பிந்தைய காலத்தைப் பற்றியது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சிருஷ்டிப்பைக் குறித்து தேவனுடைய மதிப்பிடுதல் (1:31)

**[31]அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது, சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.**

**வசனம் 31.** தேவனுடைய புகழாரத்தின் சூத்திரம் ஆதியாகமம் 1:4, 10, 12, 18, 21, 25-களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் **ஆறாம் நாளின்** தேவனுடைய மகிமையான படைப்பின் சம்பூரணத்தை வலியுறுத்த ஒரு சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, தாம் படைத்தவைகளின் குறிப்பிட்டவைகளை "நல்லது" என்ற பதத்தை அவர் பிரயோகித்திருந்தார், ஆனால் இப்போது சர்வசுதந்திர சிருஷ்டிகர் ஒரு அடி பின்சென்று தாம் **உண்டாக்கின எல்லவற்றையும் பார்த்தார்**, மிகவும் ஆர்வத்துடன், எல்லாவற்றையும் பார்த்து "நல்லது" என்று அறிவிக்காமல், **அது மிகவும் நன்றாயிருந்தது** என்று அறிவித்தார்.

"மிகவும் நன்றாயிருந்தது" என்ற தரமான பரிணாமம் என்பது மனுக்குலத்தின் படைப்பிற்கு பின்பு மாத்திரமே தேவனால் கூறப்பட்டது (*'adam*, ஆணும் பெண்ணும் சேர்ந்தது). மனித உயிரினம் தேவனுடைய படைப்பின் உச்சியாயிருக்கிறான், காரணம் அவர்கள் மட்டுமே படைத்தவரின் ரூபத்தைக் கொண்டவர்களாகவும் பூமியின்மேல் அவருடைய பிரதிநிதியாகவும் இருக்கிறார்கள் (1:26-28). "மிகவும் நன்றாயிருந்தது" என்ற மதிப்பீட்டில் மனிதனை சேர்த்துக் கொள்வது முதன்மையாக சிருஷ்டிக்கப்பட்டவனாகவும், பண்டைய மொசொபொத் தோமியாவில் மனிதனை தாழ்வாகக் கண்ணோக்குவதற்கும் எதிரிடையாக, மிகவும் மேலான கண்ணோட்டத்தில் காட்டுகிறது.

பாபிலோனிய சிருஷ்டித்தலின் புராணத்தில், கடவுள்களின் அரசன் மார்டுக் என்பவன் "ஒரு கொடியவனைச்" செய்யத் தீர்மானித்து. "அவன் பெயர் மனிதன் நிச்சயமாக நான் கொடிய மனிதனை உருவாக்குவேன்" என்றான். இந்த விவரத்தில் மனிதன், எல்லாக் கடவுள்களிலும் மிகமோசமான கிங்குவின் இரத்தத்தால் சிருஷ்டிக்கப்பட்டவன்[24] என்பதால் கொடியவனாக சிருஷ்டிக்கப்பட்டதாகவே கருதப்படுகிறான்.

பழைய மொசெபொத்தோமியா இலக்கியத்துக்கும் ஆதியாகமத்துக்கும் உள்ள வேறுபாடு தெளிவானது; முந்தினதில் மனிதன் என்ற கொடியவன் கிங்கு என்ற கொடிய கடவுளிலிருந்து வந்து மார்டுக் வழிநடத்த மற்றக் கடவுள்களோடு நடந்த சண்டையில் அழிந்தவன். பிந்தியதில் தேவனின் சாயலில் படைக்கப்பட்டு - படைத்தலின் ஒரு பகுதியாகி "மிகவும் நல்லது" என்றுக் கூறப்பட்டவன். ஒரு அன்பான, பரிசுத்தமான தேவனால் படைக்கப்பட்டவன், அவனை ஆசீர்வதிக்கவும் நல்லவற்றை அவனோடு பகிர்ந்து கொள்ளவுமே அவருக்கு பிரியம். இதுதான் ஆதியாகமத்தின் ஆறுநாட்கள் படைப்பின் வரலாறு ஆகும்.

## நடைமுறைப்படுத்துதல்

### சிருஷ்டிகராகியதேவன் (அதிகாரம் 1)

*தேவனே சிருஷ்டிகர் என்று பறைசாற்றுவதன் மூலம் விசுவாசத்தின் அடித்தளத்தை ஆதியாகமம் வழங்குகிறது*. சமய தத்துவங்களைக் கொண்ட புத்தகங்கள் போல் அல்லாமல், தேவன் இருப்பதைக் குறித்த விவாதத்தின் கருத்தாக்கங்களோடு இது துவங்கவில்லை. அறிவியல் பூர்வமான தகவல்களையோ அல்லது தேவன் ஒருவர் இருக்கிறார் என்று நிரூபிக்கவோ அல்லது அவர் பூமியையும் அதிலுள்ள அனைத்து உயிர்களையும் படைத்தார் என்பதைக் குறித்தோ அது வழங்கவில்லை. பண்டையகால மத்திய கிழக்கு பகுதிகள் முழுவதும் சாதாரணமாகக் காணப்படும் விசித்திரமான பல தெய்வங்கள் குறித்த புராணங்களை நேராக வேதாகமம் தாக்குவதுடன் துவங்கவில்லை. வானங்களையும், பூமியையும், மற்றும் அதிலுள்ள எல்லாவற்றையும் - குறிப்பாக மனிதனை - படைத்த ஒன்றான மெய் சர்வ சுதந்திரரில் உள்ள விசுவாசத்தை பறைசாற்றுவதுடன் அது துவங்குகிறது, காரணம் அவர் நல்ல தேவனாயிருக்கிறார் மற்றும் தமது சிருஷ்டிப்புகளை ஆசீர்வதிப்பதை மட்டுமே அவர் விரும்புகிறார்.

இந்த அணுகு முறையை சிலர் பலவீனமாகக் காண்கின்றனர், காரணம் அது விசுவாசத்தை முன்னிறுத்தி, காரணங்களையும் அறிவியல் பூர்வமானவற்றையும் நிராகரிக்கிறது. ஆயினும், நடைமுறையில், இது மனித காரணங்களில் குருட்டுத்தனமான விசுவாசத்தையும் இயற்கை பூர்வமான முன் அனுமானங்களை மட்டும் தவிர்க்கிறது, ஆனால் அறிவியல் பூர்வமாக நிற்கிறது, தேவனை அல்லது படைப்பைக் குறித்த சத்தியத்தில் இது ஒருபோதும் உறுதியான முடிவிற்கு வருவதில்லை. வேறுவார்த்தையில் சொல்வதென்றால், சிருஷ்டிப்பு நிகழ்ந்த காலமான, ஆதியில், எந்த மனிதனின் கண்காணிப்பும் இல்லாதபடியால், எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் தேவன் தான் காரணம் என்று அறிவியல் பூர்வமாகவோ அல்லது ஒரு

விபத்தினால் இவைகளெல்லாம் சம்பவித்தது என்று அதுவால் நிரூபிக்க முடியாது. ஒரு சாட்சி இருந்திருந்தாலும் கூட, அறிவியல் பூர்வமாக நிரூபிக்கும்படிக்கு அவைகளை திரும்ப செயல்படுத்த முடியாது. ஆகவே சிருஷ்டிப்பும் ஆதியும் விசுவாசத்தின் வகையாகவே இருக்கிறது.

*தேவனை சிருஷ்டிகராக விசுவாசிப்பது என்பது குருட்டுத்தனமான வாய்ப்பில் விசுவாசம் வைப்பதைவிட மிகவும் புத்திப்பூர்வமானது ஆகும்.* "ஆதியிலே *தேவன்* வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" (1:1; முக்கியத்துவம் சேர்க்கப்பட்டது) என்ற கூற்றானது எந்தவித ஆதாரமும் இல்லாத ஒரு விசுவாசக்கூற்றாகும். இதன் காரணமாக, சிலர் இகழ்ந்து சொல்வது என்னவென்றால், "சிருஷ்டிகரான தேவனிலுள்ள உங்கள் விசுவாசமானது எந்தவித ஆதாரமுமில்லாத இருட்டிற்குள் குதிப்பது போன்றதாகும், அதற்குப் பதிலாக நான் அறிவியலில் என் நம்பிக்கையை வைக்க முடியும் அதுவால் செயல்படுத்த நிரூபிக்க முடியும்." ஆயினும், ஒருவர் தேவனை சிருஷ்டிகராக ஏற்க மறுத்தால், சாத்தியமாகக் கூறப்படும் கூற்று இப்படியாகத்தான் இருக்கும், "ஆதியிலே *வாய்ப்பு* வானத்தையும் பூமியையும் உண்டாக்கியது." இரண்டுமே *விசுவாசக்* கூற்றுக்கள், அவைகளை நிரூபிக்கவும் முடியாது அல்லது அறிவியலால் பொய்ப்பிக்கவும் முடியாது. ஆகவே இது விசுவாசம் மற்றும் அறிவுக்கு இடையேயான விஷயமல்ல, மாறாக "எந்த மாதிரியான விசுவாசத்தை நீ கொண்டுள்ளாய்?" எது மிகவும் தத்துவார்த்த ரீதியாகவும் மற்றும் நம்பத்தகுந்ததுமாயிருக்கிறது: அதாவது விபத்தினால் ஒழுங்கானது ஒழுங்கற்றதிலிருந்து வந்தது, உயிர் உயிரற்றதிலிருந்து வந்தது, மனிதனுடைய நினைவாற்றலானது நினைவல்லாத காரியங்களிலிருந்து வந்தது - அல்லது சிருஷ்டிகர் ஒரு சிக்கலான அகிலத்தையும் மற்றும் அதிலுள்ள உயிரினங்களையும் வடிவமைத்தாரா? என்பதே கேள்வியாக உள்ளது. அவிசுவாசிகளிடமிருக்கிற பிரச்சனை என்னவென்றால், விஞ்ஞான பரிசோதனையின் மூலம் உயிர் துவக்க சம்பவத்தின் செயல் விளக்கம் இதுவரை காண்பிக்கப்படவில்லை, இயற்கையிலிருந்து உணரப்பட்டதுமில்லை அல்லது அது முடியாத ஒன்றுமாகும். ஆகவே தற்செயலாக நடப்பதில் விசுவாசம் வைக்கிறவன் தான் அறிந்த அறிவியல் உண்மைக்கு எதிரான எண்ணப் போக்கில் நம்பிக்கை வைப்பதால் குருட்டுத்தனமாக இருட்டிற்குள் குதிக்கின்றான்.

*இயற்கையின் விசுவாசமானது பலவீனமான அடித்தளத்தைக் கொண்டதாகும்.* தற்செயலாக நடப்பதில் பின்வருமாறு ஆய்வறிவு சாராத நம்பிக்கை வைப்பதென்பது பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது. கோடிக் கணக்கான துகள்களுடைய மணலை கொண்ட ஒரு வாளியை வைத்திருக்கிறார், அந்த துகள்களின் எண்ணிக்கையை சரியாக சொல்லும்படிக்கு எத்தனை முறை தரையில் கொட்டி எண்ண வேண்டும்? பதில் சொல்லும்படிக்கு கேள்வி கேட்டால்,

காலம் முடியும் வரை முயற்சித்தாலும், இது சாத்தியமாகும் என்று ஒருவராலும் உண்மையாக சொல்ல முடியாது. இந்த சிறுதுகள்களுக்கு நிகரானவை அண்டத்திலுள்ளன, அதன் எண்ணிக்கையை எழுதுவதென்றால் ஒரு அகராதி அளவு போன்ற புத்தகத்தில் ஒரு எண்ணை எழுதி அதன் பின் பூஜ்ஜியங்களைப் புத்தகம் முழுவதும் எழுத வேண்டியதாயிருக்கும். இம்மாதிரியான காரியம் எப்போதாவது சம்பவிக்கும் என்று ஒருவரும் ஒரு போதும் எதிர்பார்க்க மாட்டார்கள்; ஆனால் இந்த இயற்கை அறிவியல் என்ற பெயரில், நமக்கு சொல்லப்பட்டது என்னவென்றால், அகிலத்தின், சூரிய குடும்பத்தின், மற்றும் இந்த பூமியும் - அதனுடன் சிக்கல் நிறைந்த உயிர்களின் வடிவமும் - வடிவமும் ஒழுங்கும் - என்பது *தற்செயலாக நடந்ததின்* விளைவிற்குமேல் ஒன்றுமில்லை. இந்த குருட்டுத்தனமாக நம்பிக்கைக்கு எந்த ஒரு அர்த்தமுமில்லை, ஏனென்றால் நம் உணர்வுகளால் நம் வாழ்வில் நாம் பார்க்கக்கூடிய, அனுபவிக்கக்கூடிய எல்லாவற்றிற்கும் முரணானதாய் அது இருக்கிறது.

ஒரு குப்பை கூடத்தில் வெடிவிபத்து நிகழ்ந்த பின், அவ்விடத்திலுள்ள தூசிகள் பரந்து போய் சுத்தமாகிவிடும், மாறாக, அதிலுள்ள துண்டுகள் அல்லது ஒரு துகளுக்குப் பதிலாக, ஒரு முழுமையான கணினியாகவோ அல்லது கணினித்திரையாகவோ கண்டுபிடிக்கப்பட்டால் என்ன ஆகும்? கூர்ந்து உற்று நோக்கியதில், மிகப் பெரிய எண்ணிக்கையில் கணினி இயக்ககம், இயங்குதளத்துடன் கூடிய பதிவகம், பல்வேறுபட்ட கணினியின் உதிரிப்பாகங்கள் அங்கு கண்டுபிடிக்கப்பட்டால் என்ன ஆகும்? குப்பைக்கூடத்தின் முதலாளியைப் பார்த்து அந்த உற்று நோக்கியவர், “இந்த கணினிக்கள் எங்கிருந்து வந்தன? யார் இதை செய்தது? இது எப்படி இங்கு வந்தது?” என்று கேட்டால், அந்த முதலாளி பதிலாக, “இது எப்படி இங்கு வந்தது எனக்குத் தெரியாது, யார் செய்தார்கள் என்ற சாட்சியமும் நான் காணவில்லை. இது ஒரு வெடிவிபத்தின் விளைவாக இங்கு வந்தது.” என்று அந்த முதலாளி சொன்னால், அவர் கண்டிப்பாக நம்பி ஏற்றுக்கொள்ளமாட்டார். மீண்டுமாக, உலகத்தின் கடைசி காலம் வரை இவ்வாறு குப்பைக்கூடத்தில் வெடிவிபத்து நிகழ்ந்தாலும்கூட, இது குப்பைக்கூடத்தில் நிகழ்ந்த வெடிவிபத்தில் இருந்து வந்தது என்றால் எந்த ஒரு விவேகமுள்ள மனிதனும் நம்பமாட்டான். தரம் உயர்ந்த ஒன்று ஒருபோதும் ஒழுங்கற்ற குழப்பத்திலிருந்து வர முடியாது. மாறாக, நுண்ணறிவின் வடிவத்தினாலும், கவனமான கட்டமைப்பிலிருந்தும் வருகிறது. ஒரு கணினியும் அதன் இயக்கங்களுக்கானாலும்சரி, அல்லது வானங்களும் பூமியும் அதிலுள்ள உயிரினங்களுக்கானாலும்சரி இது தான் உண்மை.

சங்கீதக்காரன் இவ்வாறு வெளிப்படுத்துகிறான், “நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால்” (சங். 139:14

அ); ஆயினும், விஞ்ஞானிகள் இறுதியாக மூன்று இலட்சம் கோடிகள் இரகசிய குறியீடுகளைக் கொண்ட மனுக்குலத்தின் மரபு ரேகை வரைபடம் வரைந்தபோது, 1990களின் பிற்பகுதி வரையிலும் இந்தக் கூற்று எந்த அளவிற்கு உண்மை என்று முழுவதுமாக ஒருவராலும் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை. தாயின் கருப்பையிலிருந்து ஒரு உயிரணுவிலிருந்து ஒரு மனித உயிர் துவங்குகிறது ஒரு உயிரணுவிலுள்ள புரிந்துகொள்ள முடியாத தகவல்களின் தொகுப்பு ஒவ்வொன்றும் மற்றும் குழப்பம் நிறைந்த அணுவும், மைக்ரோசாப்ட்வேர் கம்பெனியின் தலைவர் பில்கேட்ஸை வழி நடத்துகிறது, ஒற்றுமை என்றால், டி.என்.ஏ என்பது மென்பொருளுக்குச் சமம், நாம் அது வரை உருவாக்கிய எந்த இயங்குதளத்திற்கு மேலான ஒன்று இதுவாகும்[25] ஆனாலும் சிக்கல் நிறைந்த கணினி இயக்கமானது, மென்பொருள் தொழில்நுட்ப வல்லுநர் மற்றும் புத்திக் கூர்மையில்லாமல் ஒரு விபத்து மூலம் சம்பவித்தது என்றால் ஒருவரும் நம்பமாட்டார்கள், இருப்பினும், தற்செயலாக குழப்பமான வடிவம் கொண்ட அணு உருவானது என்றும் நம்புகிறவர்கள் அவை எல்லாம் எப்படி வந்தது என்று எந்தவித விளக்கமும் கொடுக்க முடியாமலிருக்கிறார்கள். உண்மையில், ஐந்து பத்தாண்டுகளாக விஞ்ஞானிகள் உயிர் அணுவில் குழப்பமான டி.என்.ஏ அணு தோன்றியதற்குமான இயற்கை காரணத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் அப்படிப்பட்ட உயிர் தோன்றியதன் கொள்கையை ஆதரிக்கக்கூடிய எந்த விதமான ஆதாரங்களையும் இதுவரை கொடுக்க முடியவில்லை.[26] "ஆதியிலே வானத்தையும் பூமியையும் *தற்செயலான நிகழ்வு* சிருஷ்டித்தது" என்ற அவர்களுடைய நம்பிக்கை ஒருநாளில் நிரூபிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் நம்பிகையோடு அவர்கள் இருக்கிறார்கள். ஒரு சிருஷ்டிகரின் மேலுள்ள அவர்களுடைய அவிசுவாசம் என்பது உயிரினத்தின் இயற்கையான நிலை மற்றும் அதன் துவக்கத்தின் ஆதாரத்தின் குறைவினால் அல்ல, மாறாக, பழமொழியின் விளக்கத்தில் அது காணப்படுகிறது, "பார்க்காதவர்களைப் போல ஒருவரும் எவரும் குருடர் அல்ல."

## ஆதியில் தேவனும் நோக்கமும் (அதிகாரம் 1)

*சிருஷ்டிப்பிற்கு முன்னமே கிறிஸ்துவுக்குள் தேவன் நோக்கம் கொண்டிருந்தார்.* ஆதியாகமத்தின் எழுத்தாளர் "ஆதியிலே" என்று எழுதும் போது "துவக்கத்தில்" பிதாவாகிய தேவனைத்தவிர ஒன்றும் இருக்கவில்லை என்று அவர் அர்த்தம் கொள்ளவில்லை. சிலுவையின் நிழலில் இயேசு "பிதாவே உலகத்தோற்றத்திற்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தீர்" (யோவான் 17:24) என்று ஜெபித்து முடித்தார். இது நம்மை பின்னாக கொண்டு சென்று நித்தியத்தில் அழைத்துச் செல்கிறது - அதாவது "ஆதியிலே" என்பதற்கு பின்னாக. அப்போஸ்தலர் பவுல்

கிறிஸ்தவர்களைக் குறிப்பிடும் போது, “அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே” (எபே. 1:4) என்று சொன்னார்; ஆகவே “ஆதி” முன்பே, நிலையான சூழ்நிலை அல்லாத வேறு ஏதோ ஒன்று இருந்துள்ளது. ஒரு தெரிவு செய்யப்பட்டிருந்தது, அது தேவனுடைய சித்தம், மற்றும் இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கான சிந்தனை சம்பந்தப்பட்டதாக இருந்தது.

*சிருஷ்டிப்பிற்கு முன்பே, தமது அன்பையும், கிறிஸ்துவின் சிலுவை மூலம் தமது நோக்கத்தையும் தேவன் வெளிப்படுத்த திட்டமிட்டுள்ளார்.* மனிதனையும் மனுஷியையும் உருவாக்கி அவர்களுக்கு சுயமாய் விருப்ப முடிவெடுக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கும் முன்பே, அவர்கள் தவறான முடிவை எடுத்து பாவம் செய்வார்கள் என்றும் அவர் அறிந்திருந்தார்; ஆகவே இறுதியாக அவர்களுக்கு மன்னிப்பும், ஒரு இரட்சகரும் தேவைப்படும். சிலர் இவ்வாறாக கேட்பார்கள், “சந்தேகத்திற்கு இடமின்றி மனிதன் பாவம் செய்வான் என்றும், தங்களையும் மற்றவர்களையும் காயப்படுத்துவான் என்றும், இறுதியாக தனது இருதயத்தையும் உடைத்துவிடுவான் என்றும் தேவன் அறிந்திருந்தும், சுய விருப்பத்துடன் கூடிய மனிதனை அவர் ஏன் உண்டாக்கினார்?”

மனுக்குலத்திடமும் அதே கேள்விகள் கேட்கப்படுகின்றன: கணவர்களும் மனைவிகளும் இந்த உலகத்திற்குள் கொண்டு வரும் தங்கள் குழந்தைகள், ஒரு காலக்கட்டத்தில் கீழ்ப்படியாமற் போவார்கள் என்றும், மனமுறிவை ஏற்படுத்துவார்கள் என்று அறிந்திருந்தும், ஏன் ஜனங்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள்? தேவனுக்கோ அல்லது மனுக்குலத்திற்கோ கீழ்ப்படியாத பிள்ளைகளுக்கு ஏற்ற ஒரு மாற்று என்னவென்றால், ஒருபோதும் குற்றம் சொல்லாதபடிக்கும், மற்றும் கொடுக்கப்பட்ட கட்டளைகளுக்கு எப்போதும் கீழ்ப்படியக் கூடியதுமான ரோபோட் உலகத்தை உருவாக்குவதேயாகும். அப்படிப்பட்ட ஒரு மலட்டுத்தனமான, மற்றும் உணர்வற்ற உலகத்தில் வாழ்வதை ஒருவரும் விரும்பமாட்டார்கள் மற்றும் ஒருவேளை அந்த மாதிரியான படைப்பை தேவன் ஒருபோதும் கருத்தில் கொண்டிருக்கவில்லை. தம்முடைய ரூபத்திலும் மற்றும் சுயவிருப்ப முடிவெடுக்கும் மனுக்குலம் கொண்ட உலகத்தையே தேவன் உண்டாக்கினார் (1:26, 27).

மனுக்குலம் பாவம் செய்யும் என்றும், அவற்றிற்கு ஒரு இரட்சகர் தேவை என்றும் சிருஷ்டிப்பிற்கு முன்னமே தேவன் அறிந்திருந்தார். காலம் பூரணமடைந்த போது, சிலுவையில் மரிப்பது மூலம் பாவத்திற்கான கிரயத்தை செலுத்தும்படிக்கு தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்குள் அனுப்புவது மூலம் தமது அன்பின் உச்சகட்ட செயல்விளக்கத்தை செய்ய நோக்கம் கொண்டார் (யோவான் 3:16). இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பேதுரு சாட்சி

பகிர்ந்த பிறகு, பெந்தெகொஸ்தே நாளின்போது யூத மக்களுக்கு அவன் நினைவுகூர்ந்தது என்னவென்றால், அவர்களுக்கு முன்பாக செய்த குறைவுகளற்ற அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள் மூலம் நசரேயனாகிய இயேசுவை அவர்களுக்கு தேவன் உறுதிப்படுத்தினார். "தேவனுடைய முன்னறிவின்படியும் மற்றும் முன்தீர்மானத்தின்படியும்" இயேசுவின் சிலுவை மரணம் நிகழ்ந்ததாக அவர் அறிவித்தார். அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் மற்றும் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் அவனும் மற்ற எல்லா சீஷர்களும் சாட்சிகளாக இருந்தார்கள் மற்றும் இயேசு பரலோகத்தில் "கிறிஸ்துவாகவும் மற்றும் கர்த்தராகவும்" ஆளுகை செய்கிறார் (அப். 2:22-24, 32-36).

கொலைகாரர்கள் தங்கள் விருப்பத்திற்கு மாறாக இயேசுவை கொலைசெய்யும்படி தேவன் கட்டாயப்படுத்தினார் என்பது அதன் அர்த்தமல்ல. துன்மார்க்கர் தமது குமாரனை நிராகரிப்பார்கள் என்று தேவன் ஏற்கனவே அறிந்திருந்தார் என்பதே அதன் அர்த்தமாகும். இயேசுவின் மரணமானது துக்ககரமான விபத்தோ, அல்லது துரதிரிஷ்டவசமான தவறோ அல்ல; மாறாக, இயற்கையான அது ஒரு பலி, மற்றும் "உலகத்தோற்றத்திற்கு முன்பே முன்னறிந்த ["குறிக்கப்பட்ட"; NRSV] ஒன்றாகும்" (1 பேதுரு 1:20). அது போல பவுலும், "தேவன் நம்முடைய கிரியைகளின்படி நம்மை அருளப்பட்ட கிரியையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" என்று எழுதினார் இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின் படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு வழங்கப்பட்டுள்ளது (2 தீமோ. 1:9). தெளிவாக, எல்லா நித்தியத்திற்குமானது - உலகத்தோற்றத்திற்கு முன்பே இருந்தது - மற்றும் அந்த ஒன்று நிலையானதும் தனிமனிதனைச் சாராததாயும் இருக்கவில்லை. எதிர்மறையாக, அதாவது, தமது குமாரனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மனிதன் மேல் தமது அன்பையும், இரக்கத்தையும் மிகவும் தாராளமாகக் காட்டுவது தேவனுடைய தனிப்பட்ட நோக்கமாயிருந்தது (யோவான் 3:16). இயேசுவை கர்த்தராக ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கும்படியான சுயமுடிவை எடுக்கும் அதிகாரம் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. சுவிசேஷ செய்தியை விசுவாசித்தல், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புதல், தேவகுமாரனாகிய கிறிஸ்துவை அறிக்கையிடுதல், அவருடைய மீட்பின் இரத்தத்திற்குள் ஞானஸ்நானம் எடுத்து, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுதல் மூலம் நாம் இரட்சிக்கப்பட முடியும் (ரோமர் 10:9-13; கலா. 3:27; 1 பேதுரு1:18, 19).

*ஒரு தனிப்பட்ட தேவன் மட்டுமே மனுக்குலத்திற்கு நோக்கத்தையும் அர்த்தத்தையும் கொடுக்க முடியும்.* சுவிசேஷமாகிய நற்செய்தியின் பாகமானது, தேவன் தனிப்பட்டதல்லாத சக்தியல்ல என்பதே: அவர்

ஒரு அசையாத கிரேக்க தத்துவங்களை முன்மொழிபவருமல்ல, மனுக்குலத்திற்கான நோக்கம், அல்லது அன்பு, கருணை, உணர்வு, மனதுருக்கம் அல்லாத மற்ற எல்லா காரணங்களுக்கும் தாக்கங்களுக்குமான முதல் காரணமும் அவர் இல்லை. தோன்றியுள்ள அனைத்தும், அதாவது, அசைகிறதும் அசையாததும் தெய்வங்களாக அடையாளம் காணனும் இயற்கை யாவும் இறைவனே என்ற கிழக்கத்திய மதங்களின் தனிப்பட்டதல்லாத எல்லாமுமாக அவர் இல்லை. மாறாக, அவர் ஒரு தனிப்பட்ட தேவன், உயிரினங்களையும் எல்லாவற்றையும், - விசேஷமாக அவருடைய ரூபத்தில் படைக்கப்பட்ட மனிதனையும் படைத்தவர் அவரே. எவ்வளவுதான் ஒரு நபர் நேசிக்கப்பட முடியாதபடி சிலர் இருந்தாலும் ஒவ்வொரு நபரையும் அவர் நேசிக்கிறார், மனிதனுடைய குணாதிசயங்களை தனிப்பட்ட தேவன் ஒருவர் மட்டுமே விவரிக்க முடியும் மற்றும் தெய்வீக ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்ட அவனுக்கு கௌரவத்தையும் அவரே கொடுக்க முடியும். இதன் திருப்பமாக, மனுக்குலத்தின் உறவுகளை புரிந்துகொள்வதற்கான அடிப்படையையும், மற்றும் மற்றவர்களும் தேவனுடைய ரூபத்தை கொண்டிருக்கின்ற படியினாலே அவர்களை மரியாதையாகவும், அன்பாகவும் நடத்துவதற்கான தேவையும் வழங்கப்படுகிறது.

சிருஷ்டிப்பிற்கு நோக்கம் உண்டு, மற்றும் மனுக்குலம் இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. தேவன் ஒரு நாளில் எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் கணக்குப் பார்ப்பார் (எபே. 1:10). கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளிலே அவருக்கு முன்பாக நிற்க வேண்டுமென்பதே நம்முடைய தீர்மானிக்கப்பட்ட விதி. “சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடைய வேண்டும்” (2 கொரி. 5:10).

*மனுக்குலத்தை இரட்சிக்கும் தேவனுடைய நோக்கம் என்பது அவனுடைய சுய முடிவின் நிபந்தனைக்குட்பட்டதாகும்.* இரட்சிப்பு என்பது நிபந்தனையற்றதும் முன்குறிக்கப்பட்டது அல்ல. ஒருவரும் கெட்டுப் போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் (2 பேதுரு 3:9). எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ள வராயிருக்கிறார், விசேஷமாக நம்முடைய பாவத்திற்கான ஒரே மீட்கும் பொருள் இயேசுவே என்பதே அந்த சத்தியம் (1 தீமோ. 2:4-6). எல்லாரும் தம்மிடம் வரும்படிக்கு கிறிஸ்து சைகைகாட்டுகிறார் (மத். 11:28), ஆனால் அவர் யாரையும் அவ்வாறு செய்யும்படி கட்டாயப் படுத்தவில்லை. சுவிசேஷத்தைக் கேள்விப்படுகிற ஒவ்வொரும் கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு பதில் செயல் செய்ய சந்தர்ப்பத்தையும் பொறுப்பும் கொண்டிருக்கின்றான், மற்றும் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாயிருக்க, அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய சந்தர்ப்பத்தைக்

கொண்டுள்ளான் (மாற்கு 16:16; யோவான் 3:3-5; அப். 2:38-40; 2 கொரி. 5:17).

## மனிதனுக்குள் தேவனுடைய ரூபத்திற்கான ஆதாரம் (1:26-28)

மனிதனுக்குள்ளான தேவனுடைய ரூபத்தை விவரிப்பதற்கு இரண்டாயிரம் வருடங்களாக இறையியல் துறையினர் மிகவும் பாடுபட்டனர், எல்லாராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அகில உலக விளக்கத்தை வெற்றிகரமாக அவர்களால் அடைய முடியவில்லை. இந்த உலகத்தில் மனிதன் ஒரு ஒப்பற்ற சிருஷ்டிப்பாகும், அவன் தேவனுடைய ரூபத்தில் படைக்கப்பட்டபடியால், பண்பின் அடிப்படையிலான வித்தியாசங்கள் மற்றும் இந்த உலகத்தில் விலங்குகளுக்கு அப்பாற்பட்டு உயர்வான மாற்றங்களை மனிதன் கொண்டுள்ளான்.

*பூமியின் மேலும் விலங்குகள் உலகத்தின் மேலும் மனிதனுக்கு மட்டுமே ஆளுகைக் கொடுக்கப்பட்டுள்ளது.* தேவன் மனிதனை சிருஷ்டித்த போது, விலங்குகள் மேலான அதிகாரத்தை அவர் கொடுத்தார், ஆனால் அவன் தேவனுக்கு கீழ் தெய்வீக நம்பிக்கையுடன் கூடிய உக்கிரணக்காரனாக இருக்கிறான். மனிதன் இரண்டு உலகங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறான்: சரீரப்பிரகாரமான உலகம், மற்றும் ஆவிக்குரிய உலகம். விலங்குகளைப் போல் மண்ணினாலான காப்பாற்றப்பட வேண்டிய சரீரப்பிரகாரமான உடலைப் பெற்றுள்ளான், அவனுக்கும்கூட காற்றும், தண்ணீரும், போஷாக்கும் தேவைப்படுகிறது; ஆனால் தேவனுடைய சத்தத்தைக் கேட்கிறவனும் மற்றும் தேவனைப் போன்று சிந்திக்கின்ற ஒரே சிருஷ்டி மனிதன் மட்டும் தான் (பார்க்கவும் சங். 8:3-9).

ஆகையால், விலங்குகள் மேல் மனிதனுடைய ஆளுகை என்பது மாம்சத்திற்குரியது என்பதைவிட ஆவிக்குரியது. அது எண்ணிக்கையில் அல்லாமல் தரத்தைப் பற்றியதாக இருக்கிறது. நில திமிங்கிலத்தைக்காட்டிலும் பெரிய மூளையை மனிதன் கொண்டிருக்கவில்லை. அவன் சிங்கத்தைப் போன்று பலமானவனுமல்ல, சிறுத்தைப் புலியைப்போன்று வேக மானவனுமல்ல. அவனுடைய கண் பார்வையை கழுகின் பார்வைக்கு ஒப்பிடமுடியாது. விலங்குள் மேல் மனிதனுடைய அதிகாரம் என்பது சரீர வட்டாரத்திற்குரியது அல்ல என்று தெளிவாக உறுதியிட்டுக் கூறமுடியும், மாறாக, ஒவ்வொரு நபருக்குள்ளும் ஆவிக்குரிய தரத்தைத் தேவன் உருவாக்கியிருக்க வேண்டும்.

*மனிதன் மட்டுமே தானாக தனித்து நிற்க முடியும்.* விலங்குகளால் சிந்திக்க முடியும், ஆனால் மனிதன் மட்டுமே தனக்கு மேலான சிந்தனையை சிந்திக்க முடியும். அவன் பெரிய கேள்விகளை கேட்க முடியும்: “நான் யார்?,” “நான் எங்கிருந்து வருகிறேன்?,” “நான் ஏன் இங்கு இருக்கிறேன்.” மனிதனுக்கு மட்டுமே அடையாளப் பிரச்சனை

உள்ளது, அதனுடைய வேரையும் மற்றும் வாழ்க்கையின் நோக்கத்தையும் அவன் கண்டுபிடிக்க முயற்சிக்கிறான். இம் மாதிரியான பிரச்சனைகளுடன் விலங்குகள் போராடுவதில்லை. நாளுக்கு நாள் அவைகள் வாழ்கின்றன.

*அனுபவத்திலிருந்து கற்பதும், பெருகி வளரும் அறிவு, அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்லுதல் போன்ற தகுதிகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு.* மனிதன் மட்டும் தான் கடந்த காலத்தை (வரலாறு) அவசியமாகக் கொண்ட ஜீவியாயிருக்கிறான். அவன் கடந்த கால தகவல்களை சேகரித்து ஒவ்வொரு சந்ததிக்கும் கொண்டு செல்கிறான் ஆகவே பிந்தைய சந்ததியைவிட புதிய சந்ததி அதிக அறிவைக் கொண்டிருக்கும். எழுத்து மற்றும் ஒலி வடிவங்களிலும் அறிவை மனிதன் பாதுகாப்பதினால், அவனுடைய பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் எல்லாவற்றையும் புதிதாக கண்டுபிடிக்க வேண்டியதில்லை.

*மனிதன் மட்டுமே வாழ்க்கையின் சரீரப் பிரகாரமான காரியங்களில் அமைதியற்றிருக்கிறான்.* ஒரு வகையில், இது உண்மையாக இருக்கலாம், காரணம் “அவர்களுடைய இருதயத்தில் நித்தியத்தையும் தேவன் வைத்துவிட்டார்” (பிர. 3:11). (1) மனிதன் தான் கொண்டுள்ள பொருட்களில் ஒருபோதும் திருப்தி யடைவதில்லை. மறுபக்கத்தில், விலங்குகளைப் பொறுத்த வரையில், தங்கள் வாழ்க்கையின் சாதாரண அத்தியாவசியத் தேவைகளிலே மகிழ்ச்சியாயிருக்கின்றன. (2) தான் இருக்கின்ற நிலையிலும், தனது வெளித்தோற்றத்திலும், தான் அறிந்திருப்பதிலும், தனது அனுபவங்களிலும், மனிதன் ஒருபோதும் திருப்தியடைவதில்லை. விலங்குகளுக்கோ பார்ப்பதும், கேட்பதும் அல்லது எல்லா நேரமும் அவைகளுக்கு புதியவைகளை அனுபவிப்பதற்கான ஆசைகளோ கிடையாது. தங்களைச் சுற்றியுள்ள மற்ற விலங்குகளைவிட மேலும் வெற்றி கரமாயிருக்கும்படிக்கு அவைகள் முனைவதுமில்லை. எளிமையிலும் விசேஷங்களல்லாத வாழ்க்கையிலும் அவைகள் திருப்தி யடைகின்றன, இந்த வாழ்க்கை மனிதனுக்கு சுவாரசிய மற்றதாயிருக்கும். (3) மனிதனுக்கு துணிச்சலான ஒரு ஆவி உண்டு, அவன் புதிய எல்லையை அடைய முனைகிறான். ஆற்றைத் தாண்டி, மலைக்கு அடுத்த பக்கம் போய், மற்றும் கடலைத் தாண்டி இருப்பதையே காண அவன் முற்படுகிறவனாய் இருக்கிறான்; ஆனால் அது அங்கே நின்றுவிடுவதில்லை. சந்திரனில், அடுத்த கிரகத்தில், தூரத்திலுள்ள பால்வெளியில் என்ன இருக்கிறது என்பதை அறிய அவன் விரும்புகிறான். இம்மாதிரியான காரியங்களில் விலங்குகள் அக்கறை கொள்வதில்லை, மற்ற கண்டங்களையோ, நாடுகளையோ, உலகங்களையோ கற்பனை செய்து பார்க்கக்கூடிய திறமை அவைகளுக்குக் கிடையாது. இந்தப் புரிந்துகொள்ளுதல் இல்லாமலேயே, பரிபூரணத்திலும், மற்றும் நிறைவு செய்வதிலும் அவனுடைய தேடுதலில், மனிதன் தனக்குள் இருக்கும் தேவனுடைய

ரூபத்தை சாட்சியாக வழங்குகிறான். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்காக அதாவது கால வரையறைக்குட்பட்டு மனிதன் படைக்கப்படவில்லை; மாறாக, தேவனைப் போன்று, அவன் நித்தியத்திற்காகப் படைக்கப் பட்டவன், அவன் வரையறைக்கு அப்பாற்பட்டவன். அகஸ்டின் எழுதுகிறார், "உமக்காக எங்களை உருவாக்கினீர், உம்மிலே இளைப்பாறும் வரைக்கும் எங்கள் இருதயம் ஓய்வற்றிருக்கும்."[27]

*மனிதன் மட்டுமே செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் கூடிய நெறிமுறைகளைக் கொண்டுள்ளான்.* அவன் சரி மற்றும் தவறுடன் போராடுகிறான், மேலும் குற்ற மனச்சாட்சியை கையாள்வதில் கஷ்டப்படுகிறான் (யோவான் 8:7-11; ரோமர் 2:12-16; 1 கொரி. 8:7-13; 1 தீமோ. 1:19; 3:9; 4:2; 1 பேதுரு 3:16-21). ஒரு குழந்தை பிறக்கும் போது, ஒரு நாளில் அந்த புதிய பிறப்பு என்ன செய்யும் அல்லது எப்படி இருக்கும் என்று அதன் பெற்றோருக்கு சரியாகத் தெரியாது. "என் வாழ்க்கையை வைத்து நான் என்ன செய்வது?" என்ற கேள்வியுடன் ஒவ்வொரு குழந்தையும் வளர்கிறது. விலங்குகள் இயற்கையான உள் உணர்வுடன் செயல்படும்: அவைகளுக்கென்று நியமம் கொடுக்கப்பட்டுள்ளது, இயற்கை யாகவே செய்து முடிக்கின்றன. ஒரு பூனை பிறக்கும்போது அது என்ன செய்யும் மற்றும் எப்படி இருக்கும் என்று நமக்குத் தெரியும்; அது பூனையாக இருந்து பூனைகளுக்கு இயற்கையானதெதுவோ அதைச் செய்யும். ஹாம்லெட்டின் கேள்வியானது மனிதர்களுக்கு மட்டுமே பொருந்தும்: "இருப்பதா அல்லது இல்லாதிருப்பதா? இதுவே கேள்வியாகும்."[28] எந்த மாதிரியான வாழ்க்கையை அவன் வாழ விரும்புகிறான், தன் வாழ்க்கை எப்படியாக செல்ல வேண்டும் என்று தெரிந்தெடுக்கும் திறமை மனிதனுக்கு மட்டும் தான் உண்டு. நேர்மையாகவும், அன்பாகவும், நீதியாகவும் வாழ மனிதன் தெரிந்தெடுக்கலாம்; அல்லது மரியாதையற்றவனாகவும், சுய நலத்துடனும், துன்மார்க்கமாகவும் வாழவும் மனிதன் தெரிந்தெடுக்கலாம். இம்மாதிரியாக தெரிந்தெடுக்கும் வாய்ப்பு விலங்குகளுக்கு இல்லை, காரணம் அவைகள் நீதிநெறி கொண்ட சிருஷ்டிகள் இல்லை.

*மனிதன் மட்டுமே இயற்கையாக ரஸ ஞானம் கொண்டவன், அது ஓவியம், வர்ணம் தீட்டுதல், கவிதை, மற்றும் சிற்பம் வடிவமைத்தல் போன்றவற்றை வழங்கச் செய்யும்.* தன் வாழ்வுக்கு உதவியாயிராதவற்றில் வாரக்கணக்கிலும், மாதக்கணக்கிலும் வேலை செய்ய செலவிடும் ஒரு சிருஷ்டி மனிதன் மட்டும் தான். நாத்தீக பரிணாம கொள்கை, ஆக்கத்திறனுக்கு எதிரானது, அதாவது மனிதன் பல கோடி வருட காலகட்டத்தில் அவன் பிழைத்திருக்க உதவக்கூடிய திறமைகளை உருவாக்கினான், அவன் வாழ்வதற்கு உதவாத குணாதிசயங்களை விட்டுவிட்டான். தெளிவாக இவ்வாறு மனிதனுக்கு ஒருபோதும்

நிகழ்ந்ததில்லை, அவனுடைய கலைவண்ண மனப்பாங்கு விழுந்து போவதற்குப் பதிலாக, காலப்போக்கில் இன்னும் அதிகமாக வெளிப்படுத்தப்பட்டது. அழகுணர்ச்சி பற்றி எந்த மிருகமும் கவலைப்படப் போவதில்லை, ஏனெனில் ஒரு மிருகம் நன்றாயிருக்க இது எதுவும் கொடுக்கப்போவதில்லை. எடுத்துச் செல்லும், காரணம் அது அவைகளுக்கு கூடுகட்ட உதவிடும். ஒரு நீர் நிலத்தில் வாழும் விலங்கு தனக்கான நீர் தேக்கத்தை உறுதியாகவும் பயனள்ளதாகவும் இயற்கையாகவே கட்டியது. அழகும் ஒத்தகூறுகள் கூடிய வடிவங்களுடனும் உலகத்தைப் படைத்த தேவன், அதன் சுற்றுப்புறம் அழகாகவும் நிறைவான வண்ணங்களும், பண்ணைகளும், வடிவங்களும், மற்றும் ஒத்தகூறுகள் மத்தியில் அவர் மனிதனையும் படைத்தார். இந்த ஆசீர்வாதத்தில் ஆபத்து இருக்கிறது என்னவென்றால் தேவனுக்குள் காண்பதைவிட, மனிதன் தன் உச்சிதமான நிறைவை அழகில் தேடுவான். நிச்சயமாக, ஒருவன் இந்த வலையில் சிக்கிக்கொண்டால், சந்தோஷத்தையும் நிறைவேறுதலையும் காண்பதற்குப் பதிலாக அநேக காலங்களுக்கு முன்பு “பிரசங்கியைப்” போன்று, ஏமாற்றமும் பயனின்மையின் (மாலை) அனுபவமுமே கிடைக்கும் (பிர. 1:1, 8; 2:1-11).

*கல்லறைக்குப் பின்பு மனிதன் மட்டுமே எதிர்கால வாழ்க்கையின் எண்ணத்தைக் கொண்டுள்ளான்.* மரித்த பின்பு அடக்கம்பண்ணுவது மனிதன் மட்டுமே. மாறாக, வாலில்லா குரங்குகளும், யானைகளும் தங்கள் மரித்தவைகளை அடக்கம் செய்கின்றன என்று கூறும் நூதனக் கதைகள் உரிமை கொண்டாடினாலும், எந்த ஒரு அறிவியல்பூர்வ பரிசோதனையும் நம்பத்தகுந்த அறிக்கையை இதுவரை கொடுக்கவில்லை. விலங்குகள் மரிக்கின்றன, சிலகாலம் வரை பயந்து, துக்கமாயிருக்கின்றன, அவற்றிற்காக அவைகள் ஆயத்தப்படுவதில்லை. மரணத்தின் புனித தன்மையை ஏதோ ஒன்று மனிதனில் சுட்டிக்காட்டுகிறது. அதை மதிப்பு மிக்கதாகக் காண்கிறான், அதை ஒரு முடிவாக பார்க்காமல், அதிலும் வாழ்வதையேத் தேடுகிறான் (2 சாமு. 12:19-23; சங். 23:4-6). பண்டைய சமுதாயங்களில், மதிப்புமிக்கப் பொருட்களுடன் மரித்தவர்களை அடக்கம்பண்ணுவார்கள், அவை அடுத்த உலகத்தில் பயனள்ளளதாக அல்லது மதிப்புமிக்கதாக இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். மனிதனுடைய உள்ளத்தில் தேவன் நித்தியத்தை வைத்து விட்டார் என்ற உண்மைக்கு இது சாட்சியாயிருக்கிறது (பிர. 3:11).

தேவன் மனிதனை தனித்துவத்துடன் படைத்தார். இந்த தனித்துவத்தின் ஆசீர்வாதம் என்பது, சிருஷ்டிகரை துதித்து சேவிக்கும் விசேஷ பொறுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் குறிப்புகள்

[1]ஒரு சில மொழிபெயர்ப்புகளே வசனம் 1 சார்பு வாக்கியமாக நடத்துகிறது (NAB; NEB; NJPSV; NRSV; TEV). மேலும் தகவலுக்கு Victor P. Hamilton, *The Book of Genesis: Chapters 1—17*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 103–8 காணவும். [2]Terence E. Fretheim, "The Book of Genesis," in *The New Interpreter's Bible*, vol. 1, ed. Leander E. Keck (Nashville: Abingdon Press, 1994), 342. [3]W. H. Schmidt, "ברא," in *Theological Lexicon of the Old Testament*, trans. Mark E. Biddle, ed. Ernst Jenni and Claus Westermann (Peabody, Mass.: Hendrickson Publishers, 1997), 1:255. [4]*The Creation Epic* 4.1–146. [5]R. Laird Harris, "תְּהוֹם," in *Theological Wordbook of the Old Testament*, ed. R. Laird Harris, Gleason L. Archer, Jr., and Bruce K. Waltke (Chicago: Moody Press, 1980) (hereafter cited as *TWOT*), 2:966. [6]Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1962), 956. [7]J. Barton Payne, "רָקִיעַ," in *TWOT*, 2:862. [8]*The Creation Epic* 4.137–140. [9]H. L. Ginsberg, trans., "Poems about Baal and Anath," in *Ancient Near Eastern Texts Relating to the Old Testament*, 3d ed., ed. James B. Pritchard (Princeton, N.J.: Princeton University Press, 1969), 129–42. [10]பெத்-ஷெமேஷ் என்பதன் அர்த்தம் சூரியன்-கோயில் (Brown, Driver, and Briggs, 112). மேலும் எரிகோ என்ற பெயர் சந்திரன் என்ற வார்த்தைக்கான அதே மூல வார்த்தையிலிருந்து வருகிறது (Hamilton, 127–28, n. 4).

[11]Brown, Driver, and Briggs, 1056. [12]Ibid., 1072. [13]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 87. [14]H. C. Leupold, *Exposition of Genesis*, vol. 1 (N.p.: Wartburg Press, 1942; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1953), 86–87. [15]உதாரணமாக, மத். 3:16, 17; 28:19; யோவான் 1:1-3; 10:30-33; 20:28; அப். 5:3, 4; ரோமர் 8:9-17, 26-29; 2 கொரி. 13:14; எபே. 3:16-19; பிலி. 2:5-11; கொலோ. 1:15-17; எபி. 1:1-3; யூதா 20, 21; வெளி. 5:8-14. [16]யோபு 1:6 மற்றும் 2:1ல் தேவ புத்திரராகிய தூதர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்த போது சாத்தானும் அவருடன் இருந்தான். [17]John E. Hartley, "צֶלֶם," in *TWOT*, 2:767. [18]John N. Oswalt, "כָּבַשׁ," in *TWOT*, 1:430. [19]Hamilton, 139–40. [20]William White, "רָדָה," in *TWOT*, 2:833.

[21]*The Creation Epic* 6.8, 36. [22]*The Epic of Gilgamesh* 11.161. [23]Derek Kidner, *Genesis: An Introduction and Commentary*, The Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1967), 52. [24]*The Creation Epic* 6.29–33. [25]L. D. Virgilio, *DNA vs. Evolution: The Little Code That Confirms the End of Evolution* (Bloomington, Ind.: Author House, 2009), 107. [26]Lee Strobel, *The Case for a Creator* (Grand Rapids, Mich.: Zondervan, 2004), 226. [27]Augustine *Confessions* 1.1.1. [28]William Shakespeare *Hamlet* 3.1.55.